www.tamilarangam.net

## இந்நூலாசிரியரைப் பற்றி...

இந்நூலினை எழுதிய பேராசிரியர்; முனைவர் கா. பொ. இரத்தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணை எனும் ஊரில் பிறந்தவர். தமிழக அரசு வழங்கிய 'திரு. வி. க' விருதினைப் பெற்றவர்.

பல பல்கலைக்கழகங்கள் வழங்கிய பட்டங்களுடன் தமிழகப் புலவர் குழு வழங்கிய 'தமிழ்ச் சான்றோர்' எனும் பட்டத்தை யும் 'தமிழ் மறைக் காவலர்' 'செந்தமிழ்க் கலைமணி' 'திருக்குறள் செல்வர்' 'உலகத் தமிழர் செம்மல்' 'திருக்குறள் நெறிச் செம்மல்' 'கவிமாமணி' 'திருக்குறள் ஆய்வுச் செம்மல்' 'திருவள்ளுவர் சீர் பரவுவார்' முதலிய பட்டங்களையும் பெற்றவர்.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் 12 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்; இலங்கை அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக ஆறாண்டுக்குமேல் பணியாற்றிப் பதினையா யிரத்துக்கு மேற்பட்ட ஆட்சிச் சொற்களை வெளியிடுவதற்குப் பொறுப்பாயிருந்தவர். மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறை விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்;

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பு நிருவாகச் செயலாளராகவும், துணைத்தலைவராகவும் பல்லாண்டுகள் பணியாற்றியவர்;

திருக்குறள் தமிழரின் மறை—தமிழ்மறை என்பதை நிலை நாட்டுதற்கு 1952 இல் தமிழ் மறைக் கழகத்தை நிறுவி அதன் ஆயுள் தலைவராக இருந்து பல துறைகளில் பகர்வரும் பணிகள் செய்து வருகிறார். உலகெங்குமுள்ள தமிழர்களுடன் தொடர்பு கொண்டு உலகத் தமிழ் மன்றத்தை 1963 இல் கோலாலம்பூரில் நிறுவிப் பதிவு செய்து அதன் தலைவராகப் பல ஆண்டுகள் பணி செய்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கம், இலங்கை வானொலித் தமிழ்க் கலைமன்றம், கொழும்புத் தமிழ் எழுத்தாளர் சங்கம் முதலியவற்றின் தலைவராகவும் தொண்டு ஆற்றியவர்.

பலநாடுகளுக்குச் சென்று தமிழிலும் ஆங்கிலத்திலும் உரை யாற்றியவர்; கீழை நாட்டியற் புலவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழியல் ஆராய்ச்சியாளர் என்போரின் உலகளாவிய மாநாடுகளிலும் பங்குகொண்டு உரையாற்றியவர்; பல நாடுகளின் ஏடுகளிலும் சிறப்பு மலர்களிலும் இவருடைய கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவந்துள்ளன. உரை நடை நூல்கள் இருபத்திரண்டுக்கும், கவிதை நூல்கள் மூன்றுக்கும் ஆசிரியர், ஆறுநூல்களைத் தொகுத்தும் எழுதிச் சேர்த்தும் பதிப்பித்தவர். 'உண்மைக்குரல்', 'விடுதலைப்பரணி' எனும் ஏடுகளின் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

432

# தமிழ் ஈழப் போராட்டம்



பேராசிரியர்; முனைவர்
கா.பொ.இரத்தினம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழப் போராட்டம்

பேராசிரியர் முனைவர் கா. பொ. இரத்தினம்
இலங்கைப் பாராளுமன்ற மு.நா. உறுப்பினர்.
தலைவர், உலகத் தமிழ்மறைக் கழகம்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்,
12, சாயிநகர் இணைப்பு, ஐயப்பா நகர்,
சென்னை – 600 111.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழப் போராட்டம்
பேராசிரியர் முனைவர் கா.பொ. இரத்தினம்
க.இ. (சிறப்பு) இலண்டன், க.மு.கீ.க.இ (சென்னை),
முனைவர் (உ.ப.வ.அ) முனைவர் (உ.க.ப.க)
எச் 12/9 பாரிவீதி, சென்னை - 90
தொலைபேசி : 491 08 24

முதற்பதிப்பு : மார்கழி 1996 ; தி.ஆ. 2027
உரிமை : ஆசிரியருக்கு
வெளியீடு : பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், சென்னை.
விலை : ரூ. 20.00

படையல்:
தமிழ் ஈழப் போரில் உயிரிழந்த
வீரத் தமிழ் மறவர்களுக்கு

லேசர் டைப் செட்டிங்: ஓம் சக்தி லேசர் டைப்செட்டர்ஸ்,
சென்னை - 600 014.
தொலைபேசி :854 72 50

அச்சிட்டோர்: மூவேந்தர் அச்சகம்
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 826 71 89

விற்பனை உரிமை
காந்தளகம்,
4, முதல் மாடி, ரகிசா கட்டடம்,
834, அண்ணாசாலை, சென்னை - 600 002.

# உள்ளுறை

| | | |
|---|---|---|
| I. | முன்னுரை | 4 |
| II. | அணிந்துரை | 6 |
| 1. | தமிழ் ஈழப் போராட்டம் | 9 |
| 2. | ஈழத் தமிழருக்கு ஆட்சி உரிமை கிடைக்குமா? | 36 |
| 3. | ஈழத்தமிழர் ஆட்சி உரிமையும் இந்தியாவின் கடப்பாடும். | 41 |
| 4. | இலங்கையில் தமிழர் ஆட்சி | 48 |
| 5. | இலங்கையின் பழங்குடியினர் தமிழரே | 61 |
| 6. | இது நியாயமா? | 83 |

www.tamilarangam.net

# முன்னுரை

இலங்கையில் நடைபெறும் தமிழ் ஈழப் போராட்டத்தின் வரலாற்றினைத் தமிழகத்தமிழர்கள் பலரும் பிறநாடுகளில் வாழும் தமிழர்கள் பலரும் நன்கறியாதிருக்கின்றனர். தமிழ் ஈழப் போராட்டக் கருத்தும் கொள்கையும் முயற்சியும் தொடங்கித் தமிழ்ஈழப் போராட்டமான வரலாறும், இப்பொழுதுள்ள இலங்கை அரசின் ஆட்சிப் பகிர்வு முன்மொழிவுகள் பயன்தாரதென்பதும், இச்சூழ்நிலையில் இந்தியாவின் கடப்பாடும், இலங்கையைத் தமிழர் ஆண்டவரலாறும், இலங்கையின் பழங்குடியினர் தமிழரே என்பதும் இலங்கைத் தமிழர் தனி ஆட்சி-தமிழ்ஈழம் கேட்பது நியாயமானதே என்பதும் இந்நூலில் எடுத்துக் காட்டுப்பட்டுள.

இந்நூலிலுள்ள ஆறு பகுதிகளில் முதற் பகுதியான தமிழ் ஈழப் போராட்டம் எனும் பகுதி தமிழ் ஈழக்கோரிக்கை எவ்வாறு முளையிட்டது என்பதையும், சிங்கள அரசுகள் தமிழர் உரிமைகளைப் பறித்து, அவர்களை ஏமாற்றி அடக்கி முடக்கித் தமிழினக் கொலையில் எவ்வாறு ஈடுபட்டன என்பதையும், இணைப்பாட்சிக் கோரிக்கை எவ்வாறு தனித்தமிழ் ஈழக்கோரிக்கையாக மாறிற்று என்பதையும், தமிழருக்கு எதிராக நடைபெற்ற வகுப்புக் கலவரங்களையும், தமிழ் இளைஞர்களிடையே விடுதலை இயக்கங்கள் தோன்றிப் போராடத் தொடங்கியதையும், தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து தமிழ் ஈழத்துக்காகப் போராடுவதையும், அவர்களோடு உடன் படிக்கை செய்யப்படாவிடின் தமிழ் ஈழப் போராட்டத்தை நிறுத்த முடியாதென்பதையும், போராட்டம் தொடர்ந்தால் சிங்கள மக்களிடையே புரட்சி தோன்றுவதும் எதிர்பார்க்கத் தக்கதே என்பதையும் பிறவற்றையும் கூறுகிறது.



ஈழத் தமிழர் ஆட்சி உரிமை கிடைக்குமா? எனும் இரண்டாம் பகுதி இலங்கையின் குடியரசுத்தலைவர் திருமதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சிப் பகிர்வு முன்மொழிவுகள் "உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது" போலாகிவிடும் என்பதையும், தமிழர்க்கு உரிமை வழங்கப்படும் எனக் கருதிய சில நாடுகளும், சிங்களத் தலைவர்களின் இன விரோதச் செயல்களை இன்னும் உணராத தமிழர்கள் சிலரும் 'இலவுகாத்த கிளிகள்' போலாவார் என்பதையும் விளக்குகிறது.

மூன்றாம்பகுதி 'ஈழத்தமிழர் ஆட்சி உரிமையும் இந்தியாவின் கடப்பாடும்' என்பது. இஃது ஈழத்தமிழர் ஆட்சி உரிமை பெறப் பலவழிகளில் உதவிவந்த இந்திய அரசு இப்பொழுது செயற்படாதிருப்பது முறையா? நீதியா? எனவினாவித் தொடர்ந்து முயலுமாறு கேட்கின்றது. ஈழத் தமிழர் உரிமை பெற உதவுதல் இந்தியாவின் கடப்பாடு என இந்தியப் பெருமகனார் இராச கோபாலச்சாரியார் கூறியதையும் சுட்டிக்காட்டுகிறது.

நான்காம் பகுதி இலங்கையில் தமிழர் ஆட்சி புரிந்த வரலாற்றை விளக்கித் தமிழினம் இன்று அடிமை இனமாக்கப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது. ஐரோப்பியர் இலங்கையை ஆட்சி செய்யாதிருந்தால் 12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய யாழ்ப்பான அரசு இன்றும் தமிழ் ஈழத்தை ஆண்டு கொண்டிருக்கும் என்பதையும் விளக்குகிறது.

"தமிழர்களே இலங்கையின் பழங்குடியினர்" எனும் ஐந்தாம் பகுதி தமிழகத்தில் தமிழர் தொல் குடியினராயிருப்பது போல ஈழத்திலும் தமிழரே தொல்குடியினர் என்பதைப் பல்வேறு சான்றுகள் கட்டி

www.tamilarangam.net



விளக்குகிறது. 'உலகில் மக்களினம் தோன்றிய காலம் முதல் தமிழர் குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியான ஈழத்தில் வாழ்ந்து வருகின்றனர்' எனக் கூறல் பொருத்தமானதே.

'இது நியாயமா' எனும் ஆறாம்பகுதி இலங்கையிலுள்ள இலங்கைத் தமிழரின் வரலாற்றையும் இந்தியத் தமிழரின் வரலாற்றையும் விளக்குகிறது. 'நூற்றைம்பது வருடங்களுக்குமுன் இலங்கையிலே குடியேறிய நீங்கள் தனிஆட்சி – தனி நாடு – கேட்கலாமா? இது நியாயமா" என்று இன்றும் தமிழ் நாட்டிலே பலர் கேட்கிறார்கள். இலங்கைத் தமிழரின் பழமையையும் அவர்கள் நாடாண்ட வரலாற்றையும் யாழ்ப்பாணத் தமிழரசுகள் வட இலங்கையை ஆண்டமையையும் அவர்கள் அறியாமையே அவர்களுடைய கேள்விக்குக் காரணமாகும். நாடாண்ட இலங்கைத் தமிழர் தாம் இழந்த ஆட்சியைப் பெறப் போராடுதல் நியாயமானதே என்பதை இப்பகுதி சுட்டிக் காட்டுகிறது.

நான்காம் ஐந்தாம் ஆறாம் பகுதிகள் முன்னர் தனித்தனியாக வெளியிடப்பட்டவை. ஒருதன்மையான கருத்துக்கள் சில இவைமூன்றிலும் காணப்படுகின்றன. பொருள் விளக்கமும், தொடர்பும், முதன்மையும் கருதி அவற்றை நீக்கவோ, சீர்ப்படுத்தவோ நான் முயலவில்லை.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய நீதி அரசர் முனைவர் பெ. வேணு கோபால் அவர்களுக்கும், நூலை வெளியிட்ட பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் தலைவர், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களுக்கும் நூலை அச்சிட்டுதவிய திரு. மூவேந்தர் முத்து, அவர்களுக்கும் என் நன்றி.

எச் 12/9 பாரி வீதி, கா.பொ. இரத்தினம்
சென்னை–600 090.

# அணிந்துரை

## முனைவர் பெ. வேணுகோபால்

**சென்னை உயர்நீதி மன்ற மு.நா. நீதிபதி**

சிங்களவர் இலங்கைக்கு வருமுன் இலங்கையின் பழங்குடியினர் தமிழரே என்பதும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்துள்ளனர் என்பதும் நூலில் ஆதார பூர்வமாக விளக்கப்பட்டுள்ளன. ஆங்கில ஆட்சியினரால் பலவந்தமாகப் பிணைக்கப்பட்ட சிங்களத் தேசிய இனமும் தமிழ்த்தேசிய இனமும் இன்று இணைந்து செயல்பட முடியவில்லை. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே உண்டான பிணக்குகள், மோதல்கள், நிறைவேற்றப்படாத உடன்படிக்கைகள், ஏமாற்றங்கள் இனித் தமிழினம் பிரிந்து வாழ்வது தவிர்க்க முடியாதது என்ற சூழ்நிலையை உருவாக்கிவிட்டன என்பதை ஆதாரத்துடன் நூலாசிரியர் விளக்குகிறார்.

தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியை மதிக்காமல், இளைஞர்களையும் மாணவர்களையும் விடுதலைப் புலிகளாக இலங்கை அரசே உருவாக்கிவிட்டது. தமிழ் ஈழப் போராட்டத்தைச் சிங்கள அரசுதான் வித்திட்டு நீருற்றி வளர்த்தது என்ற உண்மையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் நூலாசிரியர். தமிழினம் பல ஆண்டுகளாகப் பல இன்னல்களை அடைந்து, பல படிகளைக்கடந்து, இன விடுதலை எனும் கடைசிப்படியை அடைந்துள்ளது என்று நூலாசிரியர் குறிப்பிடுவது மறுக்க முடியாத உண்மை.

இலட்சக்கணக்கான தமிழர்களைக் குடியுரிமை, வாக்குரிமை கொடுக்கப்படும் என்று கூறிக் கங்காணிகள் இலங்கைக்கு அழைத்துச் சென்றனர். அவர்களுடைய உழைப்புத்தான் இலங்கையின் மலைப்பகுதியில் சிறந்த

www.tamilarangam.net



தேயிலை இரப்பர் தோட்டங்களாகக் காட்சி அளிக்கின்றன. இன்று அவர்கள் குடியுரிமை இழந்து நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். தமிழர்கள் தாங்கள் பறிகொடுத்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு முயல்வது நியாயமானது என்று நூலாசிரியர் கூறுவதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

கணவன் மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழும் பொழுது அயலான் அக்குடும்பத்தில் தலையிடுவது வெறுப்புக்குரியது. ஆனால், கணவன் மனைவியின் குரல் வளையை நெரித்துக் கொல்லமுயலும் பொழுது தலையிட்டுக் கொலையைத் தடுப்பது அவனின் கடமை. இலங்கை இந்தியா நிலமையை இதனுடன் ஒப்பிட்டு மனித உரிமையை மதிக்கின்ற எவரும் இலங்கையில் வன்முறை களைத் தடுத்து நிறுத்த இந்தியா முயல்வதைக் குறை கூறமுடியாது என்று கூறியவர் தமிழ் ஈழ ஆரதவாளர் அல்லர்; இந்தியாவின் ஒப்பற்ற இராஜ தந்திரியும், மிகுந்த அரசியல் அனுபவமும், அறிவும் உள்ளவரும் சுதந்திர இந்தியாவின் முதல் ஆளுநர் நாயகமுமான இராஜ. கோபாலச்சாரியார் அவர்களே இப்படிக் கூறியுள்ளார். இலங்கைத் தமிழர் அந்த நாட்டை ஆண்ட இனம். அவர்கள் உழைப்பால் அந்த நாடு வளம் பெற்றுள்ளது. சிங்கள அரசு தமிழ் இனத்தைத்திட்டமிட்டுக் கொன்று குவித்து இனக்கொலையில் ஈடுபட்டு வரும்பொழுது ஈழத்தமிழர்கள் இந்திய அரசின் உதவியையும் தமிழக அரசின் ஆதரவையும் நாடுவது இயல்பு அல்லவா? என்று பழுத்த அரசியல் அனுபவமும், இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவரும் சிறந்த தமிழ் அறிஞருமான நூலாசிரியர் எழுப்பும் வினாவுக்கு இந்திய மக்களும் அரசும் விடைகூற வேண்டும்.

* * *

# தமிழ் ஈழப் போராட்டம்

இலங்கையின் வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதியே தமிழ் ஈழமாகும். இதனை கி.பி. 1214 தொடக்கம் ஆட்சிசெய்த யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கீசர் 1621 இற் போரில் வென்றனர். இதன்பின் தமிழ்ஈழம் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சியிலிருந்தது. 1802இல் இலங்கையைக் கைப்பற்றிய பிரித்தானிய அரசு இலங்கை முழுவதையும் ஒன்றாக்கி ஆண்டது; படிப்படியாக இலங்கை மக்களுக்கு ஆட்சி உரிமையை நல்கியது.

## சிங்களவர் - தமிழர் முதல் மோதல்

முழு ஆட்சி உரிமையையும் பெற முயல்வதற்குச் சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களுஞ் சேர்ந்து 'இலங்கைத் தேசிய காங்கிரசு' எனும் நிறுவகத்தை உருவாக்கினர். இதனை உருவாக்குவதற்கு வேண்டிய முன் முயற்சிகளில் ஈடுபட்ட சேர். பொன்.அருணாசலமே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1920 இல் நடை பெற்ற சட்டமன்றத் தேர்தலிற் போட்டியிடக் கொழும்பு நகரின் வேட்பாளராகச் சேர்.பொன்.அருணாசலத்தை நியமித்தற்குப் பெரும்பான்மையான சிங்கள உறுப்பினர் களைக் கொண்ட இந்தக் காங்கிரசு மறுத்தது. இதனால் வேதனையும் வெறுப்புங்கொண்ட சேர்.பொன்.அருணாசலம் இக் காங்கிரசிலிருந்து பிரிந்து 'தமிழர் மகாசன சபையை' நிறுவினார். **இலங்கை அரசியலில் முதலிலே தோன்றிய சிங்களவர் - தமிழர் மோதல் இதுவேயாகும்.**

www.tamilarangam.net

## தமிழ்ஈழப் போராட்ட எச்சரிக்கை

இதன்பின்னர் தொனமூர் அரசியலமைப்பு ஆணைக்குழு ஆக்கிய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்பது குறித்து அப்பொழுது இயங்கிய சட்ட மன்றத்தில் விவாதிக்கப் பட்டபொழுது சேர்.பொன்.இராமநாதன் அச்சட்டம் சிங்களவர் - தமிழர் ஒற்றுமையை மேலும் பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி அதனை ஏற்கக் கூடாதென்று வற்புறுத்தினார். இதனைப் பொருட்படுத்தாமல் அச்சட்டமன்றச் சிங்கள உறுப்பினர் அதனை ஏற்பதென முடிவு செய்தனர். இந்த முடிவினால் தமிழர் பிரிந்து வாழுவதற்குக் குரல் எழுப்புவது தடுக்க முடியாததாகும் என அப்பொழுது சேர்.பொன்.இராமநாதன் எச்சரித்தார். இதுவே சட்டமன்றத்தில் அவருடைய கடைசிப் பேச்சாகும். **தமிழ் ஈழப் போராட்டம் உருவாகும் என முதலிலே செய்யப்பட்ட எச்சரிக்கையும் இஃதே.**

இதன் பின்னர் இலங்கை அரசியலில் சிங்களவர் கட்சிகளும் தமிழர் கட்சிகளும் உருவாகி மோதியும் ஒன்றுபட்டும் ஒற்றை ஆட்சியை நடத்தின.

1949 இல் **தந்தை செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை நிறுவி இனித் தமிழர்களுக்கு இணைப்பாட்சியே வேண்டுமென்பதை வற்புறுத்தினார்.** ஆங்கிலத்தில் இக்கட்சி இணைப்பாட்சிக் கட்சி எனவே வழங்கப்பட்டது.

## தமிழ் ஈழத்துக்கு வித்திட்டோர்

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இணைப்பாட்சியைப் பெறுதற்குப் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தியது. வன்செயல்களில் ஈடுபடாமல் காந்தி அடிகளைப் பின்பற்றி அறப்போராட்டத்தில் ஈடுபட்டே சிங்கள அரசுடன் மோதியது. கட்சித் தலைவர்கள் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டனர்; சிங்களப் படையினரால் தாக்கப்பட்டனர்.

1956 இல் தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்பதை அறிந்தவுடன் அப்பொழுது இருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் முசிலிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுபட்டுத் **''தமிழ்பேசும் மக்களின் ஐக்கிய முன்னணி''** எனும் அமைப்பினை உருவாக்கினர். இந்த முன்னணி தமிழ் பேசும் மக்களின் வாழ்வுக்கும், உரிமைக்கும், மொழிப்பாதுகாப்புக்கும் வழிவழித் தாயகத்தைப் பறிபோகாமற் காப்பதற்கும் முயன்றது. இவற்றைப் பேணிப் பாதுகாத்தற்குப் **பிரிந்து இயங்கும் உரிமை கொண்ட இணைப்பாட்சியை அன்றேல் தனிநாட்டை உருவாக்கவும் இம் முன்னணி முனைந்தது.** இம் முன்னணியில் பங்கு கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள்: ஆர்.பி.கதிர்காமர், வி.குமாரசாமி, ஏ.எம்.மிர்சா, எம்.ஈ.எச்.முகமதுஅலி, சு.நடேசன், சி.சி. பொன்னம்பலம், என்.ஆர். இராசவரோதயம், எசு.எம். இராசமாணிக்கம், சீ. சுந்தரலிங்கம், ஏ.எல். தம்பியையா, வன்னிய சிங்கம். தமிழ்ஈழத்துக்கு இவர்கள் அப்போதே வித்திட்டனர் எனலாம்.

1956இல் வெளிவந்த எனது 'இலங்கையில் இன்பத் தமிழ்' எனும் நூலில், ''புத்துயிர் பெற்றுத் தழைத்தோங்கும் ஈழத் தமிழகத்துக்கு இந்நூல் உரிமையாக்கப் படுகிறது'' என்று குறிப்பிட்டேன்.

www.tamilarangam.net

## "தாயின்மேல் ஆணை.....தமிழர் ஆட்சி"

தமிழரசுக் கட்சி வெளியிட்ட விடுதலைப் பரணி எனும் ஏட்டின் ஆசிரியராக யான் பணியாற்றியபோது, 16.10.64 இல் வெளியிடப்பட்ட முதல் இதழில் 'பரணிபடுகிறோம் தரணி ஆள்வோம்' எனும் எனது ஆசிரியருரையை வெளியிட்டேன். இந்த ஏட்டின் முற்பக்கத்தில் **"தாயின் மேல் ஆணை எம் தந்தைமேல் ஆணை - தமிழரின் ஆட்சி எம் நாட்டில்....."** எனும் உறுதிமொழியைப் பொறித்தேன். அப்பொழுதே தமிழ்ஈழக் கொள்கை வேரூன்றிவிட்டது என்பதை இது நன்கு புலப்படுத்துகிறது.

தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிய வ.நவரத்தினம் 1969 இல் சுயாட்சிக்கழகம் எனும் ஒரு கழகத்தைத் தொடக்கி இதன் நோக்கம் சுதந்திர தன்னாட்சியுள்ள தமிழ்நாட்டை நிறுவுதலே எனக் கூறினார். அதற்கு முன் பாராளுமன்றத்தில் பேசும்பொழுதும் தமிழர்கள் தம் பகுதியில் தமிழ் நாட்டை உருவாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். பேச்சளவிலேயே அவர்தம் கருத்து நின்றுவிட்டது.

பேராசிரியர் சுந்தரலிங்கம் பாராளுமன்ற உறுப்பினரா யிருந்தபொழுது டி.எசு.சேனநாயக்கா அமைச்சரவையில் தமிழ்மக்களின் எதிர்ப்பை மீறி, அமைச்சராகப் பணியாற்றியவர். பின்னர் சிங்களத் தலைவர்கள் அவரைப் புறக்கணித்தனர். இதனால் வேதனையும் வெறுப்புமடைந்த அவர் மேடைகளிற் பேசும் பொழுது தமிழருக்குத் தனி நாடுதான் இனி வேண்டுமெனப் பேசினார்.



## இணைப்பாட்சியின்றேல் தனி ஆட்சி

1970இல் முதலமைச்சர் திருமதி. பண்டாரநாயக்கா நிறுவிய அரசியல் அமைப்புச் சபையில் யான் உரையாற்றும் பொழுது **"இணைப்பாட்சியைக் கொடுக்க நீங்கள் மறுத்தால் நாங்கள் தனி ஆட்சியையே பெறப் போராடுவோம்"** என்பதை வற்புறுத்தினேன். இந்த அரசியல் அமைப்புச் சபையில் யான் நிகழ்த்திய உரை "தனி ஆட்சி" எனும் பெயருடைய நூலாக வெளியிடப்பட்டுளது.

சிங்கள அரசு நிறைவேற்றிய புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தமிழருக்கு ஓர் அடிமைச் சாசனம் என்பதை விளக்கி "அடிமைச் சாசனம்" எனும் நூலை 1972 இல் வெளியிட்டேன். இந்நூலில், "எங்கள் போராட்டம்" அகிம்சைப் போராட்டம்; நயவஞ்சகச் சிங்கள ஏகாதிபத்தியச் சூழ்ச்சிக்கு எதிரான போராட்டம்; நீதியை, நியாயத்தை, உண்மையை, உயர்ந்த மானத்தை நிலைநாட்டும் போராட்டம். எனவே இந்தப் போராட்டம் எக் காலத்திலும் எவ்வகையிலும் தோல்வி காணாது. உலகத்தில் உண்மை, நீதி, நியாயம் என்றும் வெல்வதைப்போல நாமும் வெல்வோம். **நம்மை நாமே ஆள்வோம்"** என்று சுட்டிக் காட்டினேன்.

## உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கொலை

சிங்கள ஆட்சியும் அதன் காவலர்களும் தமிழரைத் தலை எடுக்கவிடாமல் அடக்கி ஒடுக்கி அழிக்க வேண்டுமெனும் நோக்குடன் திட்டமிட்டுச் செயற்படுவதை 1974 இல்

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் கடைசிநாளன்று இடம் பெற்ற குழப்பம் நன்கு புலப்படுத்துகின்றது.

சிங்கள ஆட்சியினர் இம்மாநாடு யாழ்ப்பாணத்தில் நடப்பதை விரும்பவில்லை. எனினும் தமிழ் மக்கள் ஒன்று பட்டுப் பன்னாள் முயன்று மாநாட்டைச் சிறப்பாக நடத்தினர். கடைசிநாளான 10.1.74 இல் மாநாட்டின் முடிவின்போது மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமிய அக்கூட்டத்தைக் குழப்பித் தமிழ்மக்களுக்குக் கொடுமையிழைக்கச் சிங்களக் காவலர்கள் திட்டமிட்டனர்.

தமிழ் நாட்டுப் பேராசிரியர் நயினார் முகமது கூட்டத்தில் விரிவுரையாற்றும் பொழுது நூற்றுக்கணக்கான சிங்களக் காவலர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைக் கூட்டத்துக்குள் வீசி மக்களைத் தாக்கத் தொடங்கினர். மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு நான்கு பக்கங்களிலும் ஓடினர். இதனால் ஒன்பது பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

சிங்கள அரசு துக்கம் தெரிவிக்கவுமில்லை, விசாரணை நடத்தவுமில்லை. இதனால் இது சிங்கள அரசின் ஆதரவுடன் நடந்ததென மக்கள் கருதினர்.

இம் மாபெருங் கொடுஞ்செயலைக் கண்டிப்பதற்குத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண முற்றவெளியில் மாபெரும் கூட்டமொன்றை நடத்தியது. இக் கூட்டத்தில் யான் பேசும்பொழுது **"இக்கொடுஞ்செயல் தமிழ்ஈழத்துக்கு மீண்டும் வித்திட்டுள்ளது"** என்று குறிப்பிட்டேன்.



## தந்தை செல்வா உறுதியுரை

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்துக்குத் தமிழ் மக்களின் பேரெதிர்ப்பினைத் தெரிவித்தற்குத் தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் 1972 இல் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். தமிழருடைய தொகுதியில் இடைத் தேர்தலை நடத்தித் தம்முடன் போட்டியிட்டுத் தமிழ்மக்கள் இந்த அரசியலமைப்பை ஏற்கிறார்களா என்பதை முடிவு செய்யுமாறு அரசுக்கு அறைகூவல் விடுத்தார்.

சிங்கள அரசு உரிய காலத்தில் இடைத் தேர்தலை நடத்தாமல் காலங் கடத்திக் கடைசியாக 1975 இல் தேர்தலை நடத்தியது. இந்தத் தேர்தலிற் பெரும்பாலான வாக்குகளால் வெற்றிபெற்ற **தந்தை செல்வநாயகம் தமிழர் கூட்டணி ஈழத்தமிழரின் ஆட்சியை நிறுவ இனி முயலும் என உறுதியுரை பகர்ந்தார்.**

புதிய அரசியலமைப்புச் சட்டத்தைத் தமிழ்மக்கள் யாவரும் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டதால் தமிழ் மக்களின் அரசியற் கட்சிகள் யாவும் ஒன்றுபட்டுத் தமிழர் கூட்டணி எனும் கட்சியினை 14.5.72 இல் திருக்கோணமலையிற் கூடி நிறுவின. இந்தக் கூட்டணியின் மாநாடு 1976 இல் வட்டுக்கோட்டையில் நடைபெற்றது. கட்சியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி எனவும் மாற்றப்பட்டது. இம் மாநாட்டில் இக் கூட்டணி **தமிழ் ஈழ அரசை நிறுவுதற்கே இனிப் போராடவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.**

www.tamilarangam.net



## தடுப்புக் காவல்

இதனை அறிந்தவுடன் சிங்கள அரசு தமிழ்ஈழத் தீர்மானத்தை அச்சிட்டுப் பரப்புவதையும், ஏடுகளில் வெளியிடுவதையும் தடுப்பதற்கு இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றிரவே அவசர காலச் சட்டம் ஒன்றை வெளியிட்டது. இந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துத் தமிழ்ஈழத் தீர்மானத்தை அச்சிட்டு அரசுக்கு அறிவித்துவிட்டு யாழ்ப்பாணக் கடைத் தெருக்களிலும் சந்தையிலும் மக்களுக்குக் கொடுத்தோம். காவலர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களான என்னையும் க.துரைரத்தினத்தையும், வ.ந. நவரத்தினத்தையும் மட்டுமன்றி திரு. அ. அமிர்தலிங்கத்தையும் தளைப்படுத்திப் போர்ப்படை வானூர்தியில் ஏற்றிக் கொழும்புக்குக் கொண்டு சென்று தடுப்புக் காவலில் இட்டனர்.

## தேசத் துரோக வழக்கு

பின்னர் 'தேசத் துரோகக்' குற்றஞ் சாட்டி எங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. திருமதி பண்டாரநாயக்காவின் சிங்கள அரசு நடுவர்கள் இருவரைக் கொண்ட சிறப்பு நீதிமன்றம் ஒன்றை நிறுவி வழக்கை விசாரிக்குமாறு பணித்தது. இந்த வழக்கில், உலகில் வேறெங்கும் நிகழாத ஒரு புதுமையான நிகழ்ச்சி இடம் பெற்றது. தந்தை செல்வநாயகம் சி.சி. பொன்னம்பலம் என்போர் தலைமையில் தமிழ் வழக்கறிஞர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எங்களுக்காக வாதாடினர். சிலநாள் விசாரணையின்பின் நடுவர்கள் இருவரும் இந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூற இந்தச் சிறப்பு நீதிமன்றத்துக்கு



அதிகாரம் இல்லையெனக் கூறி வழக்கு விசாரணையை நிறுத்தினர். சிங்கள அரசு இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துதற்கு முயலவில்லை.

தடுப்புக் காவலில் அடைத்த எங்கள் நால்வரையும் அரசு பத்து நாள்களின் பின் விடுதலை செய்தது. நான் தடுப்புக் காவலில் இருந்த பொழுது எழுதிய நூலைத் ''தடுப்புக் காவலில் பத்து நாள்கள்'' எனும் பெயருடன் வெளியிட்டேன்.

இந்நூலிலிருந்தெடுத்த ஒரு பத்தியைக் கீழேகாண்க:

''இலங்கையின் இரண்டாவது பெரிய இனமான தமிழினம் பல ஆண்டுகளாகப் பல இன்னல்களை அடைந்து அசையாமலும் அஞ்சாமலும் பல படிகளை ஏறிக் கடந்து **இன விடுதலை எனும் கடைசிப் படியை அடைந்துவிட்டது.** இந்தக் கடைசிப் படியிலிருந்து தமிழ் இனத்தை இறக்குவதற்கு எந்தச் சிங்கள ஏகாதிபத்தியத்தாலும் இனி முடியாது''.

## தமிழ் ஈழம் - இளைஞர்களின் போராட்டத் துடிப்பு

சிறிமாவோ அரசின் கடைசி வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது யான் 9.11.1976 இல் ஆற்றிய உரை தமிழ் ஈழம் பற்றிய எங்கள் நிலைப்பாட்டையும், தமிழ் இளைஞர்களின் தமிழ்ஈழம் பெறவேண்டுமெனும் துடிப்பையும், அவர்கள் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபடலாம் என்பதையும், அவர்களைச் சிங்கள அரசு அடக்க முடியாதென்பதையும், தனிநாடு குறித்து எங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சி பாராளுமன்றத்தில் எடுத்துரைத்த முன்மொழி வையும், வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய தமிழ்ஈழத் தீர்மானத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

இவ்வுரையின் சில பகுதிகள் ஈண்டு குறிப்பிடத்தக்கன:

''கடந்தகால அரசியல் வரலாற்றையும், தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே உண்டான பிணக்குகள்-மோதல்கள்-செய்யப்பட்ட அரசியல் தீர்வு உடன்படிக்கைகள் யாவும் நிறைவேற்றப்படாமை, ஆகியவற்றையும் ஆராயும் ஒருவர் தமிழ் இனமும் சிங்கள இனமும் ஒத்து வாழத்தக்க சூழ்நிலைகள் எல்லாம் மறைந்துவிட்டன. **இனிப் பிரிந்து வாழ்வது தவிர்க்க முடியாதது.** பிரிந்து வாழ்வதால்தான் இரண்டு இனமும் விமோசனம் அடையும் என்பதை எந்தவிதமான ஐயத்துக்கும் இடமின்றி ஏற்றுக்கொள்வார்.

**"தமிழ்மக்கள் இந்த நாடு அறிய - உலகம் அறிய இந்த நாட்டிலே தங்களுக்கு என்று ஒரு தனியான நாட்டை - அதாவது தாங்கள் இழந்த நாட்டை - மீண்டும் பெற்று ஆளவேண்டும் என்கிற முடிவான நிலைக்கு வந்துவிட்டார்கள். இஃது உலகம் அறிந்த உறுதியான ஒரு கொள்கையாகும்.**

## தமிழ்ஈழம் - பா.ம. முன்மொழிவு

எந்தத் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து நாம் காங்கேசன் துறை இடைத் தேர்தலிலே போட்டியிட்டு வென்றோமோ அந்தக் கோரிக்கையை, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப இந்தப் பேரவையில்



பின்வரும் முன்மொழிவாகச் சமர்ப்பித்திருக்கிறோம். அதை நான் இப்பொழுது இங்கு வாசிக்கிறேன்.

**"சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோசலிச தமிழ்ஈழ அரசு"** - ''இலங்கையில் வாழும் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் சுய நிர்ணய உரிமையுள்ள இரு தனித் தேசிய இனங்களாக இருப்பதாலும்;

''அந்நிய ஆட்சியினால் பலவந்தமாய் ஒன்று பிணைக்கப்பட்ட சிங்களத் தேசிய இனமும், தமிழ்த் தேசிய இனமும் இன்னும் அப்படியே பிணைக்கப் பட்டிருப்பதாலும்;

''சுதந்திர இலங்கையின் அரசாங்கங்கள் எல்லாம் சிங்களத் தேசிய இனத்தின் ஆக்கிரமிப்பு இன உணர்ச்சிக்கு ஆதரவளித்து வளர்த்துத் தமிழ் மக்களை நிரந்தரமாக ஆளப்படும் இனமாக ஆக்கும் இன்றைய அரசியலமைப்பை அவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் தமிழ்த் தேசிய இனத்தின்மீது திணித்திருப்பதாலும்; காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவை **சுதந்திர இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சோசலிச, தமிழ்ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்ய இடப்பட்ட கட்டளையாக ஏற்றுக்கொள்ள இப்பேரவை தீர்மானிக்கிறது".**

''இப்பிரேரணையின் முன்னோடியாக இந்த ஆண்டு மே மாதம் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில அரசியல் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம்.

www.tamilarangam.net



## வட்டுக்கோட்டைத் தமிழ்ஈழத் தீர்மானம்

''அந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை இப்பொழுது நான் இங்கே வாசிக்கின்றேன் :

''இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான **சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிசத் தமிழ் அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது.**

''தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திசைகாட்டியாக இத்தீர்மானம் விளங்குகின்றது. வட்டுக்கோட்டை மாநில அரசியல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானங்களையும் அதிகார அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக நான் அவற்றை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

''இன்று தமிழ் இளைஞர்கள், தாங்களும் சிங்கள இளைஞர்களைப் போல எல்லா உரிமைகளையும் பெற்று ஏன் ஆளும் இனமாக வரக்கூடாது ? ஏன் அடிமைப்பட்ட இனமாக நாம் இருக்க வேண்டும் ? என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு அகிம்சை முறையால் மட்டுமன்றி, வன்முறைச் செயலாலும் தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**''அவர்களை எவரும் அடக்க முடியாது. அவர்களின் உணர்ச்சி வேகம் இந்த நாட்டிலே ஒரு தமிழ் ஈழத்தை**



**உருவாக்கிவிடும் என்பதை நான் இந்தச் சபையிலே அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன்.''**

தந்தை செல்வநாயகம் இயற்கை எய்துவதற்குச் சில திங்களின் முன் பாராளுமன்றத்தில் பேசினார். அப்பொழுது ''கூட்டாட்சி மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டலாம் என்று போராடினோம். **இனித் தனித்தமிழ் நாடு தான் எங்கள் குறிக்கோள். தமிழ்ஈழத்தை நிறுவுதற்கே நாங்கள் முயல்வோம். இது இலகுவானதன்று. எனினும் நாங்கள் இதனைப் பெறவே போராடுவோம்''** என்று குறிப்பிட்டார்.

## தமிழ் மாணவர்கள் போராட்டம்

திருமதி. பண்டார நாயக்காவின் ஆட்சி பல்கலைகழக நுழைவுத் தேர்வுகளுக்குத் தோன்றும் சிங்கள மாணவர்களின் புள்ளிகளையும் தமிழ் மாணவர்களின் புள்ளிகளையும் வெவ்வேறாகத் தரப்படுத்திப் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யத் தொடங்கியது. இதனால் தமிழ் மாணவர்களிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற சிங்கள மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் இடம் பெற்றனர். கூடிய புள்ளிபெற்ற தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

தமிழ் மாணவர்களை ஒதுக்கச் செய்யப்பட்ட இந்தச் சூழ்ச்சி தமிழ் மாணவர்களிடையே ஒரு பெரிய போராட்டத்தை உண்டாக்கியது. மாணவர்கள் போராட்டம் தலைதூக்கியது. 1975, 76, 77, 78 ஆம் ஆண்டுகளில் அவசரகாலச் சட்டத்தின் உதவியுடன், காவலரும் படைவீரரும் தமிழப்பகுதிகளில் கொலை, கொள்ளை,

www.tamilarangam.net

தீயிடல், முதலிய கொடுமைகளைச் செய்தனர். **இவற்றாலே தமிழ் இளைஞர்களே பெரும்பாலும் பாதிக்கப்பட்டனர்; விசாரணையின்றித் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டனர்; சித்திரவதைக்கும் உட்படுத்தப் பட்டனர்.**

1977இல் தமிழருக்கு எதிராக நடந்த வகுப்புக் கலவரத்திலும் 1981, 82 இல் நடந்த வகுப்புக் கலவரங்களிலும் மலைநாட்டுத் தமிழ் மக்களும் கொல்லப்பட்டனர். தமிழ்மக்களுடைய வீடுகள் கடைகள் முதலியன சூறையாடப்பட்டன; தீயிட்டு எரிக்கப்பட்டன.

## பயங்கரவாதத் தடைச்சட்டம்

1979 இல் பயங்கரவாத தடைச் சட்டத்தை சயவர்த்தனா அரசு உருவாக்கியது. இதனுடன் அவசரகாலச் சட்டமும் சேர்ந்து தமிழ்ப் பகுதிகளிலுள்ள மக்களைப் பலியெடுத்தது. சயவர்த்தனா சிறப்புச் சிங்களப் படையை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோரை அழிக்குமாறு கட்டளையிட்டார். **இதனால் தமிழ் இளைஞர்கள் பெருங்கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். பல இளைஞர்களைச் சிங்களப் படை கொன்றது.**

இந்தக் கொடிய அடக்குமுறைகள் தமிழ் இளஞைர்களிடையே சில போராளிக் குழுக்களை உருவாக்கியது. பல்வகைப் போராட்டங்களில் அவை ஈடுபட்டன.



தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்கள அரசுக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டது. காவல் நிலையங்கள் தாக்கப்பட்டன. அவற்றிலிருந்து போர்க்கருவிகள் சூறையாடப்பட்டன. வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன. சிங்கள அரசை ஆதரித்த தமிழர் சிலர் தண்டனைக்குட்படுத்தப்பட்டனர்.

**தமிழரை அடக்கி ஒடுக்கி அழிக்க முற்பட்ட சிங்கள அரசுக்கு எதிராகத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட முயன்றனர்.**

## யாழ்ப்பாண நூல்நிலையத்துக்கு எரியூட்டல்

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட சபைகளுக்கு 1981இல் தேர்தல் நடைபெற்றது. அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருந்தமையால் ஐ.தே. கட்சியின் சிங்கள அரசு பல குழப்பங்களையும் கொடுமைகளையும் தமிழ் ஈழத்திற் செய்தது; தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் பல முறைகேடுகளைக் கைக் கொண்டது; யாழ்ப்பாணத்தில் ஐ.தே. கட்சியின் தேர்தல் பணிகளை முடுக்கி விடுதற்காக அமைச்சர்கள் இருவரையும் சிறப்புப்படையினரையும் அனுப்பி வைத்தது; தேர்தல் அதிகாரிகளை மாற்றித் தங்களுக்கு வேண்டியவர்களை அவர்களின் இடங்களில் நியமித்தது. **தேர்தல் நாளுக்கு இரண்டு நாள்களுக்கு முன் யாழ்ப்பாண நூல் நிலையத்தையும், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் வெ.யோகேசுவரன் வீட்டையும் சில கடைகளையும் சிங்களப் படைகள் எரித்தன. இவற்றுக்குப் பொறுப்பாயிருந்த அமைச்சர்களில்**

www.tamilarangam.net

ஒருவரைக் கொழும்பில் வெடிகுண்டு பலி எடுத்தது. மற்றையவர் இந்த உலகையே விட்டுப் போய்விட்டார்.

## பகமாசில் தமிழ்ஈழப் பேச்சு

1981இல் பகமாசின் தலைநகரான நாசோவில் பொதுநல நாடுகளின் பாராளுமன்ற மாநாடு நடைபெற்றது. இந்த இருபத்தெட்டாவது மாநாட்டில் யான் இலங்கைப் பாராளுமன்றப் பேராளராகப் பங்கு கொண்டேன். இம் மாநாட்டில் நான் நிகழ்த்திய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டேன்:

''சிறீலங்காவில் தேசிய சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் அரசியல் விடுதலைக்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும் செய்யும் கிளர்ச்சிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் ஒடுக்கப்படுவதால் அந்நாட்டில் அடுத்து அடுத்து வகுப்புக் கலவரங்கள் நடைபெறுகின்றன. இதனால் சிறீலங்காவிலுள்ள தமிழர்கள் தனிநாடு ஒன்றை நிறுவுவதற்குப் போராட உந்தப்பட்டுள்ளர். இந்நாட்டை அவர்கள் தமிழ்ஈழம் என்கின்றனர். தமிழரின் தனிப் பெருங் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி எப்படியும் மதச் சார்பற்ற சம தர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதே தனது போராட்டக் குறிக்கோள் என இலங்கைப் பாராளுமன்றத்திலும் வெளியேயும் பிரகடனம் செய்துள்ளது''. இந்த உரையே தமிழ் ஈழத்தை உருவாக்குதலே தமிழரின் போராட்டக் குறிக்கோள் என்பதை உலகத்துக்கு எடுத்துக் கூறியது.

25.6.1983இல் நான் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் தமிழ்ப்பகுதிகளில் சிங்களப் படைவீரர் செய்து



வந்த கொடுமைகள் கொலைகள் எரியூட்டல்கள் முதலியன பற்றி எடுத்துரைத்தேன். அவ்வுரையிலிருந்து சில பகுதிகளை இங்கே தருதல் இன்றியமையாதது.

''காவற்படையினர் — சட்டத்தையும் நிலைநாட்ட வேண்டிய காவற்படையினர் — இப்பொழுது தமிழ் ஈழத்தகனத்தில் ஈடுபடுகின்றனர். யாழ்ப்பாண நூல் நிலையத்துக்கு நிகழ்ந்தது போன்று, கந்தர் மடத்தில் நிகழ்ந்தது போன்று, வவுனியாவில் நிகழ்ந்தது போன்று, திருக்கோண மலையில் நிகழ்ந்தது போன்று எரியூட்டுகின்ற நிகழ்ச்சிகள் சென்ற அரசாங்க காலத்திலே தமிழ்ப் பகுதிகளிலே நிகழவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற அரசாங்கம் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே நான் இதனைச் சொல்கிறேன்.

## காழ்ப்புணர்ச்சி கொண்ட காவற்படை

நாள் செல்லச் செல்ல, காலம் செல்லச் செல்ல இந்த மோதல்கள் பெருகிக் கொண்டே போகின்றன; வகுப்பு வாதம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இப்பொழுது வகுப்புவாதம் அரசியல் வாதிகளிடம் மட்டுமன்றி, அரசியற் கட்சிகளிடம் மட்டுமன்றிக் காவற்படையினரிடமும் புகுந்து விட்டது. காவற்படையினர் நடுவுநிலைமையோடு கடமையாற்றாமல் தாங்கள் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வேறுபாட்டைக் காட்டி வருகிறார்கள்.

எந்தப் பகுதியில் அவர்கள் பணி புரிகிறார்களோ அந்தப் பகுதி மக்களுடைய மொழியே தெரியாமல், அந்தப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி மக்களுடன் தொடர்பு கொள்ளவே தெரியாமல் காவற்படையினர் இருக்கின்றபடியாலும் கொடுமைகள் அடிக்கடி தலை எடுக்கின்றன. முன்னர், தொல்லை வந்தால் காவற்படையினர் உதவி செய்வார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். இப்பொழுது, இந்த அரசாங்கத்தின் காலத்திலே காவற்படையினரே மக்களை அழிக்கிறவர்களாக இருக்கிறார்கள்; எரிக்கிறவர்களாக ஆகிறார்கள்.

அதுமட்டுமன்று, அந்தக் காவற் படையினருக்கு சிங்களம் ஒன்றைத் தவிர தமிழர்களுடைய மொழியான தமிழும் தெரியாது, ஆங்கிலமும் தெரியாது. ஒரு முறை என்னை வழியிலே மறித்தார்கள். எனக்குச் சிங்களம் தெரியாது. அவர்களுக்குத் தமிழும் தெரியாது, ஆங்கிலமும் தெரியாது. இதனால் அவர்களுடன் பேச முடியவில்லை. எனக்கே இந்த நிலை என்றால் சாதாரண தமிழ் மக்களின் நிலை எவ்வாறிருக்கும். காவற்படையினர் தமிழ் மக்களை எந்த முறையிலே நடத்துகிறார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்! உண்மையில் அவர்கள் மக்களை விசாரித்தாற்கூட மொழி தெரியாத காரணத்தினால் மக்கள் எதுவும் சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, வகுப்புவாதம் காவற்படையிலே புகுந்தபின் அரசாங்கம் கொடுக்கின்ற கட்டளைகளையே அதுமீறி விரும்பியபடி நடப்பதைத் தடுக்க முடியாத ஒரு சூழ்நிலையிலேதான் இந்த நாட்டிலே இத்தகைய தொல்லைகள் தோன்றுகின்றன.

எனக்கு முன் பேசிய எனது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் காவற்படையினர் செய்கிற தொல்லைகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். நான்



அவற்றைத் திருப்பிச் சொல்லவில்லை. பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் சிலவற்றை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

## வேலியே பயிரை மேய்கிறது

''வன்னியில் படையினரைக் கண்டதும் ஒடி ஒதுங்கும் நிலை'' - 10.6.83 ஆந் தேதிய வீரகேசரி இப்படி எழுதுகிறது :

''வவுனியா நகரில் கடந்த முதலாந்தேதி இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து நடைபெற்ற சீருடையினரின் தாக்குதல்களால் வன்னிப் பிரதேச மக்கள் கொண்டுள்ள பீதியும் பதற்றமும் இன்றும் அவர்களை விட்டு நீங்கவில்லை''.

இந்த வீரகேசரி இதழில் இன்னுமொரு செய்தி :

''வடக்கில் இராணுவ கெடுபிடி ஆரம்பம்; போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது தாக்கு''.

இப்படி நாங்கள் சொல்லவில்லை, வீரகேசரி சொல்கிறது. வீரகேசரி எங்களை ஆதரிக்கிற பத்திரிகை அன்று. பொரும்பாலும் அரசாங்கத்தோடு சேர்ந்து நடக்கிற பத்திரிகை. அது 10-6-83ஆம் தேதி சொல்கிறது :

''வடக்கில் இராணுவ கெடுபிடி ஆரம்பம்! போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது தாக்கு''.

''வடக்கில் போக்குவரத்து விதிகளை மீறும் வாகனச்சாரதிகள் சைக்கிள் ஒட்டிகளுக்கு எதிராக இராணுவத்தினர் தன்னிச்சையான முறையில் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

www.tamilarangam.net



''வழமையாக பொலீசாரே இக்கடமைகளைக் கவனித்து வருவது வழக்கம். இராணுவத்தினர் இப்பொழுது தன்னிச்சையான முறையில் பொலீசாரின் அதிகாரங்களைக் கைப்பற்றித் தமிழ் மக்களைத் துன்புறுத்தத் தொடங்கியிருப்பது இங்குப் பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது''.

**''தமிழ் மக்கள் அச்சத்துடன் காலத்தைக் கழிக்கின்றனர்''** ஈழநாடு 4-6-83.

மட்டக்களப்பு வேபர் மைதானத்தில புதிய ஆயரின் வரவேற்பின்போது இரு இளைஞர் மீது ராணுவ வீரர் தாக்குதல்'' - 9-6-83 வீரகேசரிச் செய்தி.

''யாழ்தேவி பயணிகள் மீது தாக்குதல், சிவில் உடையில் வந்தோர்'' - வீரகேசரி, 4-6-83.

இப்படியே பத்திரிகைச் செய்திகள் எல்லாவற்றையும் பார்க்கின்றபொழுது இராணுவத்தினர் செய்யும் செயல்களாலே தமிழ் மக்கள் பீதியடைந்து வீதிகளிலே நடக்க முடியாமல் அல்லலுறுகிறார்கள் என்பது புலனாகின்றது.

இது தவிர, 8-6-83 வீரகேசரி, ''வேலியே பயிரை மேய்வதா?'' என்று ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. இந்தத் தலையங்கம் மிகச் சிறப்பாக, எனக்கு முன் பேசிய வவுனியா உறுப்பினர் கூறியவற்றை உறுதிப் படுத்தும் முறையிலே இருப்பதால், அதில் ஒரு பகுதியை மட்டும் நான் இங்கே வாசிக்க விரும்புகிறேன்.

''வேலியே பயிரை மேய்வதா?''



''பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சில வீரர்கள் சட்டம், அமைதி, ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு நேர்மாறான முறையில் தாமே வன்செயல்களில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படும் சம்பவங்கள் பற்றி வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள் எமக்கு மிகுந்த கவலையையும் விசனத்தையும் அளிக்கின்றன. சீருடை அணியும் இப்படை வீரர்கள் சிவில் உடையில் ஆங்காங்கு தமிழ் மக்களை அடித்துத் துன்புறுத்தியும் அவர்களின் உடைமைகளை அபகரித்தும் அவற்றுக்குச் சேதம் விளைவித்தும் தொடர்ந்து அட்டகாசம் புரிந்து வருகிறார்களாம்.'' - இது எங்களுடைய கூற்றன்று.

8-6-83 வீரகேசரி ஏட்டிலே **''தொடர்ந்து தொல்லையா?''** என்ற தலைப்பில்

''வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இராணுவ வீரர்கள் அப்பாவி மக்கள் மீது அடிக்கடி நடத்திவரும் தாக்குதல்களைப்பற்றி வெளியாகும் செய்திகள் எமக்கு மிகுந்த கவலையளிக்கின்றன. இராணுவ வீரர்களின் தொல்லை தொடர்ந்து நீடிப்பதால் மேற்படி பிரதேசங்களில் வாழும் மக்களின் நிம்மதி குலைக்கப்படுகின்றது. சட்டத்தையும் அமைதி ஒழுங்கையும் நிலைநாட்டி, பொதுமக்களுக்குப் பாதுகாப்பினை அளிக்க வேண்டியவர்கள் இராணுவத்தினர். **இதற்கு நேர்மாறான வகையில் இராணுவ வீரர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் வரம்பு மீறிய முறையில் மக்களை அடித்துத் துன்புறுத்தித் தொல்லை கொடுத்து வருவது மிகுந்த விசனத்துக்குரியதாகும்''** எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

''இவ்வாறாகப் பத்திரிகைகளிலே இராணுவத்தினர் அங்கேயுள்ள மக்களை எல்லைமீறித் தாக்குவதைப் பற்றிப்பல செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

## விடுதலைப் புலிகள்

''1972 ஆம் ஆண்டில் அன்றைய பாராளுமன்றத்தில் தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியை மதிக்காவிட்டால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகும் என்று நான் கூறினேன். இன்று இளைஞர்கள் - மாணவர்கள் யாவரும் விடுதலைப் புலிகளாகவே ஆகிக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்கள் ஒரு தற்கொலைப் படையை உருவாக்கும் நிலமையும் உருவாகிக் கொண்டிருக்கிறது.

''மாவட்ட சபைகள் தமிழ் ஈழத்திற்கோ தன்னாட்சிக்கோ மாற்றீடு என்று சொல்வதை விட்டுவிடல் வேண்டும். நல்ல முறையில் இயங்கிவந்த கிராமச்சபைகளை இல்லாமற் செய்து, பொருந்தொல்லையை மாவட்ட சபைகள் கொடுத்திருக்கின்றன.

## மலேசியாவும் சிங்கப்பூரும்போல் வாழலாம்

''இந்த நாட்டிலே அன்று தொடக்கம் இன்றுவரை உள்ள தமிழ் மக்கள் கேட்டுக்கொண்டு வருகின்ற அவர்களுடைய சுயநிர்ணய உரிமையைக் கொடுத்து அவர்கள் தாம் விரும்பிய முறையில் தங்களை ஆளும் உரிமையை நீங்கள் கொடுத்தால் எப்படிச் சிங்கப்பூரும் மலேசியாவும் நல்லுறவுடன் இருக்கின்றனவோ, அதிலும்



பார்க்க உலகிற்கோர் உதாரணமான நாடுகளாக - சகோதர நாடுகளாக - நாங்கள் வாழமுடியும். பாகித்தானும் இந்தியாவும் போலல்லாமல் நாங்கள் நல்ல நாடுகளாக - நல்ல சகோதர நாடுகளாக வாழுகின்ற ஒரு நிலைமை இருக்கின்றதென எங்கள் உள்ளத்திற் பட்டதைச் சொல்லவேண்டியது எங்கள் கடமை.

நான் நான்கு திருக்குறள்களை மட்டும் உங்களுக்கு இன்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற அரசாங்க காலத்திலே அமைச்சராக இருந்த திரு.பிலிக்சு ஆர்.டயசு பண்டார நாயக்கா அவர்களுக்கு நான் ஒரு திறந்த முடங்கல் விடுத்திருந்தேன். அதில்

**"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு''**

என்று குறிப்பிட்டேன். இன்றைக்கு அவர் எங்கே இருக்கிறார். அவருடைய அரசாங்கம் எங்களுக்குச் செய்த கேட்டின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். இந்தப் பயனை நீங்களும் அனுபவிக்கப்படாது என்பதற்காகத்தான் நான் இவற்றை உங்களுக்குக் கடைசியாகச் சொல்கிறேன்.

**"அல்லற்பட்டாற்றாது அழுத கண்ணீரன்றோ**
**செல்வத்தைத் தேய்க்கும் படை"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். மக்கள் துன்பம் தாங்கமுடியாமல், ''அய்யோ'' என்று அலறுகினற அந்தக் கண்ணீர் அரசுகளையும் அவற்றின் செல்வத்தையும் அழித்துவிடும்.

**"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி யாகி விடும்"**

www.tamilarangam.net

அஃதாவது அளவுக்குமிஞ்சி நீங்கள் அநியாயங்களையோ கெடுதிகளையோ செய்தால் அழிந்து விடுவீர்கள் என்கிறது இந்தத் திருக்குறள்.

''உடம்பாடி லாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று''

அஃதாவது ஒற்றுமையாக வாழ முடியாதவர்கள் - உடன்பட்டு வாழ முடியாதவர்கள் - ஒரு வீட்டில் பாம்போடு வாழ்வதைப் போலத்தான் வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

## 24 மணி நேரத்தில் தமிழ் ஈழம்

எனவே நாங்கள் சகோதரர்களாக, இந்த நாட்டிலே அரசியல் காழ்ப்பு இல்லாமல், **ஆயுதப்படையும் எங்கள் விடுதலைப் போராளிகளும் மோதாமல், இரத்தமோடாமல் வாழவேண்டும் என்றால் அன்று தொடக்கம் இன்று வரையும் நாம் கேடகின்ற தமிழ் ஈழத்தை நீங்கள் தர வேண்டும். அதைத் தர நினைத்தால் 24 மணி நேரத்தில் தரலாம். எப்படி 24 மணி நேரத்துக்குள் சிங்களம் மட்டும் கொள்கையைக் கொண்டு வந்தீர்களோ அதுபோல 24 மணி நேரத்தில் தமிழ் ஈழத்தைத் தந்தால் மட்டுமே பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.''**

## சிங்கள அரசுடன் பேசுவதில்லை

சிங்கள அரசின் அடக்கு முறைகளாலும் கொடுஞ் செயல்களாலும் தமிழ் மக்கள் யாவரும் அந்த அரசுக்கு எதிராகத் திரண்டெழுந்தனர். 1983 யூலைத் திங்கள் 23, 24 ஆம் நாள்களில் மன்னாரில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாடு நடைபெற்றது. **இந்த மாநாட்டில் தமிழ் ஈழத்தை உருவாக்குதலே த.வி. கூட்டணியின் பணி எனவும் சிங்கள அரசுடன் எத்தகைய பேச்சிலும் முன் போல் இனி ஈடுபடுவதில்லை எனவும் முடிவு செய்யப்பட்டது. இம்மாநாடு** நடக்கும் பொழுதே இலங்கை முன் காணாத கொடிய வகுப்புக் கலவரம் மூண்டது.



1982இன் கடைசிப்பகுதியில் தமிழ் அறிஞர்களும் சிறைப்படுத்தப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து 1983 சித்திரையில் ''காந்தீயம்'' எனும் தொண்டு நிறுவனத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களுடைய அலுவலகமும், பல ஊர்கள், பயிர்கள், வாகனங்கள் முதலியனவும் சிங்களப் படைகளால் அழிக்கப்பட்டன.

இந்த ஆண்டில் மே 18ஆம் நாள் யாழ்ப்பாண நகரம் இரண்டாம் முறையாகத் தீக்கிரையாக்கப்பட்டது. சிங்களப் படைகளுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் போராட்டமும் தொடர்ந்தது.

## விடுதலைப் புலிகள் மோதல்

1983 யூலை 22ஆம் நாள் யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களப் படையினர் மூன்று தமிழ்ப் பெண்களைக் கடத்தித் தங்கள் பாசறைக்குக் கொண்டு சென்றனர். அப் பெண்களை அவர்கள் கற்பழித்தனர் என்ற செய்தி எங்கும் பரவியது. இப் பெண்களுள் ஒருத்தி தற்கொலை செய்து கொண்டாள். **இதனால் சீற்றங்கொண்ட விடுதலைப்புலிகள் அடுத்த**

www.tamilarangam.net

நாளே படையினரின் வாகனம் ஒன்றுக்குக் குண்டு வீசி 13 படை வீரர்களைக் கொன்றனர். இதனால் யாழ்ப் பாணத்திலிருந்த சிங்களப் படைவீரர்கள் வீதிகளிலே சென்றவர்களை எல்லாம் தாக்கினார்கள். 30 தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். யாழ்ப்பாணத்தில படைவீரர்கள் கொல்லப்பட்ட செய்தி கொழும்பிலும் பிற இடங்களிலும் பரவிய அடுத்தநாளே பெரும் இனக்கலவரம் சிங்களப் பகுதிகளில் மூண்டுகொழுந்து விட்டெரிந்தது.

## மாபெரும் இனக்கலவரம்.

கண்ட கண்ட இடங்களிலே தமிழர்கள் வெட்டியும் சுட்டும் எரித்தும் கொல்லப்பட்டனர். தமிழர்களுடைய வீடுகள் கடைகள் சூறையாடப்பட்டன; கொளுத்தப்பட்டன, கொல்லப்பட்ட தமிழரின் தொகை மூவாயிரத்துக்குமேலாகும். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். பன்னூறு கோடி பெறுமதியுள்ள பொருள்களையும் தமிழர்கள் இழந்தனர்.

பல இளைஞர்களும் அறிஞர்களும் தமிழ் ஈழப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டிக்கொழும்புச் சிறைச்சாலையிலே அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களிலே 37 பேர் சிறையிலே 27.7.93 அன்று கொல்லப்பட்டனர்; அடுத்தநாள் 17 பேர் கொல்லப்பட்டனர். இவர்களுள்ளே குட்டிமணி டாக்டர் இராச சுந்தரம் முதலானோர் அடங்குவர். **உலக நாடுகள் பிறவற்றில் எங்கேனும் நடைபெறாத - வரலாறுகாணாத சூழ்ச்சிக் கொலை - இனக்கொலை இது.** சிறைக்குப் பொறுப்பான அரசு அலுவலர்கள் பெருங் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்று அச் சிறையிலிருந்த சிங்களக் ''குண்டர்''களிலே பலரைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களுக்குப் பல்வகைக் கொலைக் கருவிகளைக் கொடுத்தனர். அவர்களுடன் அடைக்கப்பட்டிருந்த தமிழர்களை அடித்தும் வெட்டியும், குத்தியும் கொல்லுமாறு அந்த அரசு அலுவலர்கள் அவர்களை வழிப்படுத்தினர். இதனால் 54 தமிழர்கள் இரக்கமின்றி மிருகத் தனமாகக் கொல்லப்பட்டனர்.



இந்த ஈனக் கொலை நிகழ்ச்சி ஒன்றே சிங்கள அரசின் மிருக வெறியையும் தமிழர் மேற்கொண்ட பகைமையையும் காட்டப் போதுமானது. இது **தமிழர்களும் சிங்களவர்களும் இனி ஒன்றாக வாழமுடியாது என்பதையும் தமிீழமே தமிழருக்குப்பாதுகாப்பளிக்கும் என்பதையும் நிறுவுகிறது.**

**இந்த இனக் கொலையும் சிங்களவருடைய மிருக வெறியும் தாண்டவமாடிய நேரத்தில் தமிழ் மக்களின் பேரழிவுக்குக் காரணமான குடியரசுத் தலைவர் சயவர்த்தனாவும் அவருடைய கட்சியினரும் தமிழரை வாட்டி வதைத்து ஒடுக்கி அழித்தற்குத் திட்டமிட்டனர். தாங்களே வகுத்த அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு ஒருதிருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினர். இத்திருத்தச் சட்டத்தின்படி தமிழ் ஈழம் பற்றி - தனிநாடு பற்றிப் பேசுவது தடை செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் புதிதாக உறுதிமொழி பகர்ந்தே பாராளுமன்றப் பணிகளிலீடுபட வேண்டும். ''நாட்டைப் பிரிக்கும் எம்முயற்சியிலும் செயலாலும் சொல்லாலும் ஈடுபடமாட்டோம்'' என்பதே அந்த உறுதிமொழி யாகும்.**

www.tamilarangam.net

இந்த மாபெரும் வகுப்புக் கலவரத்தின்பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றஉறுப்பினர் தங்கள் பாராளுமன்றப் பதவிகளைத் துறந்தனர்.

## விடுதலைப்புலிகளின் தொடர் போராட்டம்

இந்த மாபெரும் இனக் கலவரத்தின்பின் தமிழ் ஈழப் போராட்டம் வீறுகொண்டது. தமிழ்ப் போராளிகள் சிங்கள அரசுக்கு எதிரான போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டனர். இவர்களில் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் மட்டுமே இன்றும் போர்க்களத்தில் உளர். ''தமிழ் ஈழமே புலிகளின் தாகம்'' என்றுரைத்துப் போராடும் இவர்கள் தில்லிமா நகரில் 1983 மார்ச்சில் நடைபெற்ற அணிசேராநாடுகளின் ஏழாவது உச்சிமாநாட்டில் கூடிய மூன்றாம் உலகத் தலைவர்களுக்குக் கொடுத்த **"விடுதலைபெறுதற்குத் தமிழரின் போராட்டம்"** எனும் விளக்கக் குறிப்பு விதந்து குறிப்பிடத்தக்கது.

சிங்கள அரசுகள் தமிழருக்குச் செய்த கொடுமைகளை இது விளக்குகிறது இதில் பல இலட்சம்தோட்டப்பகுதித் தொழிலாளர்களின் வாக்குரிமை குடியுரிமைகளைப் பறித்தமை, தமிழ் ஈழப் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் நிலங்களைப் பறித்து அவற்றிலே சிங்களவரைக் குடியேற்றியமை, தமிழரின் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு முதலியவற்றைத் திட்டமிட்டு ஒடுக்கியமை, பொருளாதாரத்தை அமுக்கியமை, தமிழருக்கு எதிராக நடந்த இனக் கலவரங்கள், தமிழர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொன்றமை, தமிழ் மக்களுக்கு இணைப்பாட்சிபெறத் தமிழரசுக் கட்சி நடத்திய மென்முறைப் போராட்டங்கள், தமிழ் ஈழப் போராட்டத் தொடக்கம், இளைஞர்கள் ஆயுதந்தாங்கிச் சிங்கள அரசை எதிர்ப்பது, விடுதலைப் புலிகளின் தமிழ் ஈழப் போராட்டம் முதலியன தெளிவாகவும் திட்பமாகவும் விளக்கப்பட்டுள.



போராளிக் குழுக்களின் தொடக்க காலப் போராட்டங்களும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தமிழ் ஈழவிடுதலைப் போராட்டமும் போராட்டகால மோதல்களும், போர்களும், விடுதலைப் புலிகளின் ஆட்சியும் விரிவாகத் தனிநூலாக எழுதப்படல் வேண்டும்.

தமிழ் ஈழப் போராட்டத்தில் இப்பொழுது (1996 ஆடி) போர்க்களத்தில் நின்று தொடர்ந்து போராடுபவர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளே என்பதை முழு உலகமும் அறியும்.

தமிழ் ஈழப் போராட்டம் தமிழின விடுதலைப் போராட்டமேயாகும். தமிழின விரோத வகுப்புவாத சிங்கள அரசுகளே இந்தப் போராட்டத்துக்கு வித்திட்டு நீருற்றி வளர்த்தன.

## புலிகளுடன் உடன்படிக்கை
## இன்றேல் போராட்டம் தொடரும்

நான் பல ஆண்டுகளாகப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கூறியதையே இப்பொழுதும் வற்புறுத்த விரும்புகிறேன். சிங்கள அரசு தமிழ் ஈழக் கோரிக்கையை உளங்கொண்டு தமிழ் ஈழவிடுதலைப்புலிகளுடன் - தமிழினத்துடன் உடன்படிக்கை செய்து கொள்வதால் மட்டுமே இலங்கையில் அமைதி உண்டாகும். அன்றேல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழத் தனி ஆட்சி உருவாகும் வரை தமிழ் ஈழப் போராட்டம் தொடரும் என்பதைக் கூற வேண்டியதில்லை.

தொடர் போராட்டத்தாலும், பொருளாதாரத்தின் நலிவாலும் சீர்குலைவாலும், வாழ்க்கைச் செலவின் உயர்வாலும், போதிய வருவாய் இன்மையாலும் சிங்களப் பொதுமக்களும், சிங்கள இளைஞர்களின் வன்முறை எழுச்சி இயக்கமான 'சே.வி.பி'யும் பெரும் புரட்சியில் ஈடுபடுவதும் எதிர்பார்க்கத் தக்கதே!

★ ★ ★ ★

# ஈழத்தமிழர்களுக்கு ஆட்சி உரிமை கிடைக்குமா?

இலங்கையின் குடிஅரசுத் தலைவரான திருமதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்மக்களின் பெரும்பாலான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர், **இலங்கையின் அமைதியைக் குலைக்கும் தமிழர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருதற்கு அவர்கள் விரும்பும் ஆட்சிப் பகிர்வைச் செய்வேன் என்று இவர் கூறினார்;** ஆட்சிப் பகிர்வு முன் மொழிவுகளையும் வெளியிட்டார். இவற்றால் தமிழரின் கோரிக்கைகளிற் பெரும் பகுதி நிறைவேற்றப்படும் என இந்தியாவும் பிறநாடுகளும் எண்ணின.

## ஒரு குட்டையில் ஊறிய இரு மட்டைகள்

சிங்களத் தலைவர்களுடன் தமிழரின் உரிமைகளுக்காகப் பல ஆண்டுகள் போராடிய எங்களிற் பலர் **இம் முன்மொழிவுகளாற் பயன் விளையாது என்பதை நன்கறிவோம். தமிழரின் உரிமைகளைக் கொடுப்பதாகக் கூறிப்பின் கொடுக்காமல் விடுவதில் இலங்கையில் மாறிமாறி ஆட்சி நடத்தும் ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்று பட்டனவே. இந்தச் செயற்பாட்டில் இந்த இருகட்சிகளும் 'ஒருகுட்டையில் ஊறிய இருமட்டைகளே" என்று நான் இலங்கைப் பாராளுமன்றத்திலேயே சுட்டிக் காட்டியுளேன்.**

www.tamilarangam.net



இந்தியப் பிரதமர் இரசீவ் காந்தியும் இலங்கை அதிபர் சயவர்த்தனாவும் 1987இல் செய்த உடன்படிக்கை தமிழருக்குப் பலன் நல்காது [1] என்பதை நான் அந்த உடன் படிக்கையை ஆராயச் சென்னையில் 7.8.87இல் நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுத்துக் கூறி விளக்கினேன்.

இந்த உடன்படிக்கையால் உருவாக்கப் பட்ட மாகாணச் சபைகள் சிங்களப் பகுதியில் இன்றும் ஆட்சி செய்கின்றன. மேல் மாகாணச் சபையின் தலைவராக - முதன் மந்திரியாகத் திருமதி சந்திரிகா பணியாற்றினார். அப்பொழுது அவர் இச்சபைகளின் அதிகாரத்தைக் கூட்டவேண்டுமென்று வற்புறுத்தினார்.

## தமிழ் ஈழ அரசே வேண்டும்.

வடகிழக்குச் சபை உருவாக்கப்பட்ட போது அதன் தலைவராகத் திரு.வரதராசப் பெருமாள் தெரிவு செய்யப்பட்டார். ''இந்தச் சபைக்கு உள்ளூராட்சி மன்றத்தின் அதிகாரம் கூட இல்லை'' என்று அவர் கூறித் தமிழர் உரிமைகளைக் கொடுப்பதற்குத் தமிழ் ஈழ அரசே வேண்டுமெனுங் கருத்தை வெளியிட்டுவிட்டு இந்தியாவுக்கு ஓடிவந்தார். இந்திய அரசு அவருக்குப் புகலிடம் கொடுத்து இன்றும் அவரைப் பாதுகாத்து வருகிறது.

அரைகுறை அதிகாரத்தையுடைய இச்சபை இன்று தமிழ் மாகாணங்களில் தொழிற் படவில்லை. தொழிற்படுத்தவும் முடியாது. ஏனெனில் இம்மாகாணங்கள் இன்று போர்க்களமாகி விட்டன.



## ஈழத்தமிழரின் தாயகம்.

இந்த உடன் படிக்கை வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒன்றாக்கி ஈழத்தமிழரின் தாயகத்தைச் சிங்கள அரசும் ஏற்கச் செய்த பெருமைக்கு உரியது.

திருமதி சந்திரிகாவின் ஆட்சிப் பகிர்வு முன் மொழிவுகள் சயவர்த்தனா அரசே ஏற்றுக் கொண்ட ஈழத் தமிழர் தாயகத்தைக் கைவிட்டு விட்டன. இப்பொழுதுள்ள மாகாணங்களையே ஆட்சி அலகுகளாகக் கொண்டுள்ளன.

ஈழத் தமிழரின் நீண்ட காலக் கோரிக்கையான ஒன்றுபட்ட தாயகத்தை ஒதுக்கிவிட்ட இந்த ஆட்சிப்பகிர்வு முன் மொழிவுகளைப்பற்றி இவை சிறந்த கூறுகளை உடையன எனவும், இவற்றுடன் இன்னும் சில கூறுகள் சேர்க்கப்படவேண்டுமெனவும் அன்பர்கள் நாளேடுகளில் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

## ஆட்சிப்பகிர்வின் அடித்தளம் நொறுங்கிவிட்டது

1995 இல் வெளியிடப்பட்ட இந்த ஆட்சியப் பகிர்வு முன் மொழிவுகள் 1996இல் வரைவுச் சட்டமாக்கப்பட்டன. இந்த வரைவுச்சட்டத்திற் சில கூறுகள் விடப்பட்டன, சில மாற்றப்பட்டன. இதனால் முன் மொழிவுகளிலுள்ள சில கூறுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வரைவுச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத் தேர்வுக்குழுவின் ஆய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுளது.

எதிர்க் கட்சியான ஐ.தே. கட்சி இந்த வரைவுச் சட்டத்திலுள்ள முதன்மைக் கூறுகள் பலவற்றை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்க்கின்றது. இப்பொழுது நடைமுறையிலுள்ள ஒற்றை ஆட்சிக்கு மாற்றாக மண்டலங்களின் இணைப்பு ஆட்சியை நிறுவுதல் என்பதே இந்தவரைவுச் சட்டத்தின் அடித்தளமாகும். இந்த அடிப்படை மாற்றத்தை ஏற்க முடியாதென ஐ.தே.கட்சி இப்பொழுதே உறுதியாக அறிவித்து விட்டது[2]. இதனால் **ஆட்சிப் பகிர்வு வரைவுச் சட்டத்தின் அடித் தளமே நொறுங்கி விட்டது.**

அன்றியும் ஐ.தே.கட்சியின் தலைவர் இறனில் விக்ரமசிங்கா இரண்டு வினாக்களை எழுப்பி உளர். திருமதி சந்திரிகா இந்த ஆட்சிப் பகிர்வை உளமார விரும்புகிறாரா ? அவருடைய கூட்டணியிலுள்ள எல்லாக் கட்சிகளும் இதனை ஆதரிக்கின்றனவா ? என்பனவே அவருடைய வினாக்களாகும்[3].

## "அரைவயிறனாகும்"

அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சர் அவர்களே "இந்த வரைவுச் சட்டத்துக்குப் பாராளுமன்றத் தேர்வுக் குழுவில் முட்டுக் கட்டை போடப் பட்டுளது என்றும், அஃது ஓர் உணர்ச்சிமயமான நிலைமையை அடைந்துளது" என்றும் கூறுகிறார். தேர்வுக்குழு ஆராய்ந்து முடிவு செய்தபின், இந்த ஆண்டின் முடிவிலேயே இது பாராளுமன்றத்துக்குச் செல்லும் என்றும் அவர் கூறியுளர். பராளுமன்றத்துக்குச் செல்லும் பொழுது இந்த வரைவுச் சட்டம் "அரைவயிறனாகும்".



## ஏமாற்றமும் போராட்டமும் எஞ்சும்

பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சியும் ஆதரித்து வாக்களித்தால் மட்டுமே இது சட்டமாக்கப்படும். சந்திரிகாவின் அரசியல் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை மடக்கி அடக்கி விழுத்தி விட்டு அடுத்த தேர்தலிலே வெற்றிபெறத் திட்டமிட்டுச் சூழ்ச்சியும் முயற்சியும் செய்யும் ஐ.தே.கட்சி இச்சட்டத்தை நிறைவேற்ற விடுமா ? விட்டாலும் இச் சட்டத்தைக் **"கால்வயிறனாகவோ பதராகவோ"** ஆக்கிவிடும். இவ்வாறு ஆக்கப்பட்ட சட்டம் இலங்கை மக்களின் பொதுவாக்கெடுப்புக்கு விடப்படல் வேண்டும். பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் இதை ஏற்காமலும் விடலாம். ஏற்றாலும், ஏற்காமல் விட்டாலும் **தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றமும் போர்க்களமுமே கிடைக்கும். தமிழ் ஈழ அரசில் மட்டுமே தமிழர் உரிமையோடு வாழமுடியும் எனும் எங்கள் நெடுங்கால நிலைப்பாட்டையே இது மீண்டும் வலியுறுத்தும்.**

★ ★ ★

1. The Hindu - 8.8.87
2. The Hindu - 5.7.96
3. The Hindu - 4.7.96

www.tamilarangam.net

# ஈழத்தமிழரின் ஆட்சி உரிமையும் இந்தியாவின் கடப்பாடும்

வரலாற்றுக் காலத்துக்கு முன்னும் பின்னும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள பல்வகைத் தொடர்புகளை ஆராய்ந்தும் விளக்கியும் பல நூல்கள் எழுதப்பட்டுள. ஈழத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழகத் தமிழர்களுக்குமுள்ள பல்வகைத் தொடர்புகள் அவர்களை ஓரினத்தவர்களாக ஆக்கியுள. மொழியால், பண்பாட்டால், சமயத்தால், வாழ்வியலால், தோற்றத்தால் அவர்களிடையே வேறுபாடில்லை. சங்ககாலந் தொடக்கம் ஈழத் தமிழ்ப்புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து பல பணிகளை ஆற்றியுளர். ஈழத்துப் பூதன் தேவனார் தொடக்கம் இன்றுவரை ஈழத் தமிழ்ப் புலவர்களைத் தமிழ்நாடு வரவேற்றுளது. இவ்வாறே தமிழ் நாட்டுப் புலவர்களை ஈழமும் ஏற்றுளது.

இந்தியா தன்னாட்சி பெறுதற்குமுன் ஈழத்தமிழரும் தமிழகத்தமிழரும் பல் வகையான உறவுகளைக் கொண்டிருந்தனர். இரண்டொரு மணியிற் கடக்கத்தக்க கடலே முன்பு ஒன்றாயிருந்த இலங்கையையும் இந்தியாவையும் இப்பொழுது பிரிக்கின்றது.

## இந்தியாவின் உதவியை நாடுவது இயல்பே

தம் இனத்தவராகிய தமிழகத் தமிழருடன் இத்தகைய இணைப்பும் பிணைப்பும் உள்ள ஈழத்தமிழர்கள் தங்களை



ஆளும் பிற இனத்தவரான சிங்களவரின் அரசு தங்கள் உரிமைகள்ளைப் பறித்தும், ஆட்சி உரிமைப்போராட்டத்தைச் சிதைத்தும் இனக் கொலையில் ஈடுபடும் பொழுது **தமிழ்நாட்டரசின் ஆதரவையும் இந்திய அரசின் உதவியையும் எதிர் பார்ப்பதும் நாடுவதும் இயல்பே யாகும்.**

சென்ற நூற்றாண்டின் இறுதியில் இலங்கையின் மலைப் பகுதிகளிலுள்ள இரப்பர் தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றுதற்காக அப்பொழுது இந்தியாவையும் இலங்கையையும் ஆண்ட பிரித்தானிய அரசு தமிழகத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழர்களை அழைத்துச் சென்று இலங்கையில் குடியேற்றியது. இந்த மக்களுக்குக் குடியுரிமையும் வாக்குரிமையும் கொடுக்கப் பட்டன.

பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசு சட்டங்களை ஆக்கி இந்தத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்தது. இந்த மக்களின் உரிமைகளைப் பெறுக் கொடுப்பதற்கு இந்திய அரசு, பிரதமர் நேரு காலம் தொடக்கம் தொடர்ந்து சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியது ; உடன்படிக்கைகளையும் உருவாக்கியது.

## ஆட்சி உரிமைப் போராட்டத்துக்கு இந்திய ஆதரவு

இவ்வாறே ஈழத் தமிழரின் ஆட்சி உரிமைப் போராட்டத் தொடக்கத்திலிருந்து இந்திய அரசு பேோராட்டத்தை ஆதரித்தும், தீர்வு காண்பதற்காகச் சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் வந்துளது. ஈழப்

www.tamilarangam.net



போராட்டக் குழுக்களுக்கு இந்திய அரசும் தமிழ் நாட்டரசும் நல்கிய ஆதரவையும் பல்வகை உதவிகளையும் உலகம் அறியும். எனவே, அவற்றை இங்கே விரித்துரைக்க வேண்டியதில்லை. **அன்றியும் ஈழத்தமிழர்களின் ஆட்சி உரிமைப் போராட்டத்தைத் தீர்த்துவைப்பதற்கு இந்திய அரசு, தொடர்ந்து முயன்று வந்தது என்பதும் யாவர்க்கும் தெரியும்.**

பிரதமர் இந்திராகாந்தி திரு பார்த்தசாரதியை ஈழத்தமிழரின் பிரச்சினையைத்தீர்ப்பதற்குச் சிங்கள அரசுடன் பேசக் கொழும்புக்கு அனுப்பிவைத்தார். அவர் பல முறை சிங்கள அரசுடனும் எங்கள் கட்சித்தலைவர்களுடனும் உரையாடினார். பிரதமர் இராசீவ் காந்தி ஆட்சியின்போதும் இந்திய அரசின் சார்பிற் பலர் ஈழத்தமிழர் பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்குச் சிங்கள அரசுடன் பேசுதற்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் இப்பொழுதைய நிதி அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் திரு இரமேசு பண்டாரி முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

## திம்புவில் கூடிப் பேசினர்

இலங்கை அரசுடன் போராட்டக்குழுக்களின் தலைவர்களும் த.வி.கூட்டணித்தலைவர்களும் கூடிப் பேச்சுவார்த்தை நடத்துதற்கு இந்திய அரசு பொறுப்பேற்று அவர்களைத் திம்புவிலே கூடிப் பேச்சுவார்த்தை நடத்துமாறு செய்தது.

1987இல் பிரதமர் இராசீவ் காந்தி சிங்கள அரசின் தலைவர் சயவர்த்தனாவுடன் ஈழத் தமிழர் சார்பில் ஓர் உடன்படிக்கையை உருவாக்கினார். இந்த உடன்படிக்கை



எழுதப்படுமுன் அவர் இதனைப் பற்றி ஈழத்தமிழர் தலைவர்களையோ தமிழ் நாட்டரசையோ உசாவவில்லை. ஈழத்தமிழர்களுடன் அவர்கொண்ட தொடர்பையும் பற்றையும் உரிமையையும் இந்நிலைப்பாடு புலப்படுத்துகிறது எனலாம். அன்றியும் இது தாய்நாடு சேய்நாட்டுக்காற்றும் நன்றியாகவும் கொள்ளப்படலாம்.

இந்த உடன்படிக்கையின்படி சயவர்த்தனாவின் வேண்டுகோளுக்கிசைந்து அமைதி காத்தற்கு அவர் இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பினார். **சயவர்த்தனாவின் சூழ்ச்சியால் இந்த அமைதி காக்கும் படை ஈழவிடுதலைப் புலிகளுடனும் தமிழர்களுடனும் மோதத் தொடங்கியதால் உண்டான துன்ப விளைவுகளை யாவரும் அறிவர்.** சிங்களப் படைவீரர் எவரும் கொல்லப்படாமல் - போர் புரியாமல் - விடுதலைப் போராளிகளையும் தமிழர்களையும் ஒடுக்கி அடக்குவதற்கு சயவர்த்தனா செய்த சூழ்ச்சி வெற்றிபெற்றது.

இந்த உடன்படிக்கையும் தமிழர்தம் ஆட்சி உரிமைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. இந்தியப் படை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு மீண்டது.

இராசீவ்காந்தி கொலை வழக்கு நடுவர் மன்றில் விசாரிக்கப் படுகின்றது. இம் மன்றின் தீர்ப்பே கொலையாளிகள் யார் என்பதை முடிவு செய்யும். இந்தக் கொலையின் பின்னணிச் சூழ்ச்சிகளைச் ''செயின் ஆணைக் குழு'' ஆராய்கின்றது. இதன் முடிபு வெளியிடப் பட்ட பின்னரே இக்கொலையின் மர்மங்களை அறிய முடியும். கொலை செய்தவர்கள் கொடுந் தண்டனைக்குட் படுத்தப்பட வேண்டியவர்களே!

www.tamilarangam.net



## இந்தியா பேசாமல் இருப்பது நியாயமா?

இக்கொலை காரணமாகவோ வேறு காரணங்களாலோ இந்திய அரசு ஈழத்தமிழர் உரிமைப்போராட்டத்தைத் தீர்த்துவைக்கச் **செய்துவந்த முயற்சிகளைக் கைவிட்டுப் பேசாமல் ஒதுங்கியிருப்பது நியாயமா? தருமமா?** இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தொடர்ந்து முயல்வது இந்திய அரசின் கடப்பாடன்றோ? பிற நாடுகளும் இஃது இந்தியாவின் பொறுப்பென்று தானே கருதுகின்றன.

இந்திய அரசு பேசாமலிருப்பதால் ஈழத் தமிழர்கள் தங்கள் நாட்டிலேயே அகதிகளாக்கப் படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர், பட்டினிக்கும் சொல்லொணாத் துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும், அவலங்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். எந்த நாட்டிலே எந்த அரசு சிங்கள அரசைப் போலச் சிறுபான்மை இனத்தவர்களை வானிலிருந்தும் கடலிலிருந்தும் நிலத்திலிருந்தும் கண்மூடித்தனமாகத் தொடர்ந்து குண்டுகளை வீசிக் கொல்கின்றது? அவர்களின் வீடுகளையும், கல்வி நிலையங்களையும், மருத்துவ சாலைகளையும் பிறகட்டடங்களையும் உடைத்துத் தகர்க்கின்றது; போதிய உணவும் மருந்தும் கொடுக்காமல் பிற நாடுகள் கொடுப்பதையும் தடுக்கிறது. சிங்கள அரசின் இந்தக் கொடுமைகளைக் கண்டித்துக் குரல் எழுப்பித் தமிழ் நாட்டுமக்கள் யாவரும் ஒன்றுபட்டு **ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஒரு நாள் முழு அடைப்புப் போராட்டம் நடத்தியதையும் பொருட்படுத்தாமல் இந்திய அரசு பேசாமலிருக்கலாமா?**



## உலகமெங்கும் வாழும் தமிழர்களின் எதிர்பார்ப்பு

இப்பொழுது புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள தமிழ் நாட்டரசும் இந்திய அரசும் ஈழத் தமிழர்கள் தம் ஆட்சி உரிமையைப் பெறுதற்கு விரைந்து உதவும் என உலகமெங்கும் வாழும் கோடிக்கணக்கான தமிழர்கள் ஆவலோடும் துடிப்போடும் நம்பிக்கையோடும் எதிர்பார்க்கிறார்கள்.

## இராசகோபாலாச்சாரியாரின் கருத்து

இவ்வுரையை முடிப்பதற்கு முன் தமிழ்நாட்டின் முதலமைச்சரும் இந்தியாவின் ஆளுநர் நாயகமும், இந்தியப் பெருமக்களுள்ளே முன்னணியில் மிளிர்ந்தவருமாகிய இராச கோபாலாச்சாரியார் கூறியதை இங்குச் சுட்டிக்காட்டுவது ஏற்புடைத்து.

''என் அயலவரும் அவர் மனைவியும் மகிழ்ச்சியுடன் வாழும் பொழுது அவர்களின் குடும்பத்தில் யான் தலையிடுவது வெறுப்புக்குரியதும் தாங்க முடியாததுமே. எனினும், என் அயலவன் தன் மனைவியின் குரல்வளையை நெரித்து அவளைக் கொல்ல முயலும் பொழுது தலையிட்டுக் கொலையைத் தடுப்பது என் கடமையாகும்.

**சிறிலங்காவிலுள்ள நிலைமைகளின் தொடர்பில் இந்தியாவும் இந்நிலைமையிலேயே உளது.**

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வோர் இனக்குழுவுக்கும் ஐக்கிய நாடுகளின் சபையால் உறுதி

www.tamilarangam.net



செய்யப்பட்டுள்ள மனித உரிமையை மதிக்கின்ற எவரும் இந்தவன்முறைகளைத் தடுத்து நிறுத்த இந்தியா முயல்வதைக் குறைகூற முடியாது.''

**இந்த உரையில் அவர் இலங்கையில் நடைபெறும் தமிழினக் கொலைகளையும் வன் முறைகளையும் தடுத்து நிறுத்தும் கடப்பாடு இந்தியாவுக்குரியது என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் காட்டியுளர்.**

---

✓ When my neighbour and his wife are living happily my inteference in their family will be obnoxious and will not be tolerated, but if my neighbour is trying to throttle his wife and kill her I have a duty to intervene and stop the murder.

India is in the same position as far as conditions in Sri Lanka are concerned.

No one who values the right of every individual and every ethnic group to the human rights, which are guaranteed by the U.N Charter will blame India for trying to play a hand in stopping the violence. வரலாற்றில் தமிழ் ஈழம் ப. ம். 182- உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன்.

★★★

# இலங்கையில் தமிழர் ஆட்சி

பழம் பெருமையும் பல பெயர்களுமுடைய இலங்கையிலே சிங்களவர் ஓரினமாக உருவாகுவதற்கு முன் தமிழர்களுடன் இயக்கர்களும் நாகர்களும் வாழ்ந்துவந்தனர் என்பது பல சான்றுகளாற் புலனாகின்றது. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள பம்பரகத் தலாவாவிற் காணப்பட்டதும் கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்குரியதுமான குகைக் கல்லெட்டு நாகர் குலப் போர்வீரன் ஒருவனைக் குறிக்கிறது.

இயக்கர்களும் நாகர்களும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களேயாவர் என்பர். திராவிடர் என்பது ஆரியர்கள் தமிழ்நாட்டிலுள்ளவர்களைக் குறிப்பதற்கு ஆண்ட சொல்லாகும். அவர்கள் தமிழ்மொழியையும் திராவிடம் என்றனர். திராவிடர் என்பது ''கலைக்கப்பட்டவர்'' 'ஒதுக்கப்பட்டவர்' எனும் பொருளுடையதென்றனர். திராவிடம் என்றால் வினைகளை ஓட்டுவது எனும் பொருளையே உடையது எனச் சிவஞான முனிவர் கூறித் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி ஆக்கினார். ''எவ்வினையும் ஒப்புதலால் திராவிடமென்றியல் பாடை'' என்பது அவர் வாக்கு.

## இராவணன் புகழ் மிக்க தமிழ் மன்னன்

முதலாவது தமிழ்ச் சங்கத்தின் தொடக்க காலம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பர். தமிழருடைய நாகரிகமென இப்பொழுது நிறுவப்படும் சிந்துவெளி நாகரிகம் ஏறக்குறை ஏழாயிரம் ஆண்டுகளுக்கு

www.tamilarangam.net



முற்பட்டது. எனவே, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழர்களே பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாக தென்தமிழ் நாட்டிலும் வாழ்ந்தனர் என்பது புலனாகிறது. ஆரியர் புகுத்திய 'திராவிடர்' எனுஞ் சொல்லை ஒழித்துத் தமிழரே தமிழ்நாட்டின் தலை இனம் - தனியினம் எனக்கோடலே பொருத்தமானது. இவ்வாறு கொள்ளின் இயக்கர்களும் நாகர்களும் தமிழினத்தவர்களே என்பதை மறுக்க முடியாது.

இப்பொழுது கிடைக்கும் சான்றுகளின்படி இலங்கையை ஆண்ட தமிழர்களிலே முற்பட்டவன் இராவணனே யாவான். இவன் சிறந்த வீரன்; பேராற்றலுடையவன்; சிறந்த இசை வல்லுநன்; தமிழருடைய சமயமாகிய சைவ சமயத்தவன்; தென்னாடுடைய சிவனை வணங்கியவன். இவனுடைய மனைவி மண்டோதரி கற்புக்கரசியாகப் போற்றப்படுகிறாள். திருவாசகம் இவள் சிவனருளைப் பெற்றாள் என்று கூறுகிறது.

''ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர்
வண்டோ தரிக்குப் பேரருளின்ப மளித்த
பொருந்துறை மேய பிரான்''

என்பது திருவாசகம்

நாக அரசர்கள் நாக தீபம் எனப்பட்ட வட இலங்கையையும் கல்யாணி எனப்பட்ட தென்மேற்கிலங்கையையும் ஆண்டார்கள். சிங்களவர் ஆட்சி இலங்கையிற் கால் கொள்வதற்கு முன்னரே இவர்கள் ஆண்டனர். நாக அரசர்களுடன் இலங்கைக்குப் புத்தர் பெருமான் வருகையை இணைத்து மகாவமிசம் கூறுகிறது. இக்கூற்றுக்குப் புத்தர் பெருமான் வரலாற்றிலே சான்றுகளில்லை.



**ஈழத்தமிழரின் பழமை - அகழ்வுகள் நிலை நாட்டுகின்றன.**

சிங்கள இனம் தோன்றுவதற்கு முன் தமிழகத்தில் தமிழர் தோன்றிய காலம் தொடக்கமாகுதல் இலங்கையிலே தமிழர் வாழத் தொடங்கியிருத்தல் வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆனைக்கோட்டையில் அகழ்ந் தெடுக்கப்பட்ட முத்திரை ஒன்றில் சிந்துவெளி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இது இலங்கைத் தமிழரின் பல்லாயிர ஆண்டுத் தொன்மைக்குச் சான்று பகர்கின்றது.

அன்றியும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் கி.மு. 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். இவற்றைப்போன்ற தாழிகள் இலங்கையில் புத்தளத்துக்கு அண்மையிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. **இவை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்களின் வாழ்க்கை முறைகள் இலங்கையில் நிலைத்திருந் தமைக்குச் சான்று பகர்கின்றன.**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கந்தரோடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பழைய நாணயங்களும் விசயன் காலத்துக்கு முன் இலங்கையில் தமிழ் மக்கள் பலலாண்டுகள் வாழ்நதனர் என்பதை நன்கு புலப்படுத்துகின்றன.

கடைச் சங்க கால நூல்களாகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்பவற்றிலே ஈழத்துப் பூதன்தேவனார் பாடிய ஏழுபாடல்கள் உள. இவர் ஈழநாட்டிலிருந்து தமிழ்நாட்டு மதுரையிற்றங்கிப் பல தமிழ்ப் பாடல்களைப் பாடினார். கடைச் சங்க காலத்திலே ஈழத்திலே தமிழ்ப்புலமை மிக்கார் பலர் இருந்தனர் என்பதை இவருடைய வரலாறு புலப்படுத்துகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களவர் விசயனைத் தம் இனத்தின் முதலரசன் எனப் போற்றுகின்றனர். 'மகாவமிசம்', 'தீப வமிசம்' எனும் நூல்கள் விசயனைப் பற்றியும் அவனுடைய இலங்கை வருகையைப் பற்றியும் விரித்துரைக்கின்றன. இவற்றின் கூற்றை உறுதிப்படுத்த இன்றுவரை எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. விசயன் கதை ஒரு கட்டுக்கதை என்பர்.[1]

விசயனுக்கு முன்னர் கி.மு.. இலங்கையின் பல பகுதிகளிலும் தமிழர் வாழ்ந்தனர் என்பதும் இராவணன் முதலியவர்கள் அனுராதபுரத்தைத் தலைநகராக்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கன.

இலங்கையில் புத்த சமயம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் புகுத்தப்பட்டபொழுது ஆண்ட தேவ நம்பியதீசன் என்பவன் தமிழரசனேயாவான். அவன் புத்த சமயத்தைத் தழுவினமையால் அவனைச் சிங்கள அரசனாக்கின பாலிமொழி நூல்கள்.

இவனுக்குப் பின் கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் சேனன் குட்டிகன் எனும் இரு தமிழர்கள் இலங்கையை இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டனர். இவர்களைக் குதிரைவணிகர் என மகாவமிசம் கூறுகிறது. இவர்களை அசேலன் என்னும் சிங்கள மன்னன் வென்று பத்தாண்டுகள் ஆட்சி புரிந்தான்.

## எல்லாளன் ஆட்சி

அசேலனை எல்லாளன் எனும் சோழநாட்டிளவரசன் வென்று இலங்கையை நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஆண்டான். இவனுடைய ஆட்சியின் மாட்சியையும் செங்கோலின் சிறப்பையும் மகாவமிசமே எடுத்துரைக்கின்றது. இவனுடைய நீதியின் சிறப்பை



விளக்கும் கதைகள் பல இன்றும் வழங்குகின்றன. இவனோடு நேருக்குநேர் துட்டகைமுனு எனும் சிங்கள இளவரசன் போர்புரிந்தான்[2]. இந்தப் போரிலே எல்லாளன் மடிந்தான். எல்லாளனின் பெருமையையும் ஆட்சியையும் துட்டகைமுனு போற்றி, எல்லாளன் தன்னுடன் போர் புரிந்து இறந்த இடத்தில் அவனுக்கு ஒரு நினைவுச் சமாதியை எழுப்பினான். அச்சமாதியினைக் கடந்து செல்வோர் அச்சமாதிக்கு மரியாதை செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டான். இந்தச் சமாதி இன்றும் அனுராதபுரத்தில் உளது.

துட்டகைமுனு இலங்கை முழுவதையும் தன்னாட்சிக்குட்படுத்தினான். இவ்வாறு செய்வதற்கு இவன் மகியங்கனையை ஆண்ட சாத்தன் எனும் சிற்றரசன் உட்பட முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்களை வென்றான் என மகாவமிசம் கூறுகிறது. இச்செய்தி இலங்கையின் பல பகுதிகளை அக்காலத்தில் தமிழ்ச் சிற்றரசர்கள் ஆண்டனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

இலங்கையைத் தமிழர் ஆட்சியிலிருந்து மீட்ட பெருவீரன் எனத் துட்டகைமுனு சிங்களவராற் பாராட்டப்படுகிறான். **எல்லாளன் - துட்டகைமுனு போரே தமிழர் சிங்களவர் மோதலுக்குக் கால்கோளாக அமைந்தது எனலாம். இன்றும் சிங்களத் தீவிரவாதிகள் 'எங்கள் உடலில் துட்டகைமுனுவின் இரத்தம் ஓடுகிறது' என்று பேசுகின்றனர்.**

**சில ஆண்டுகளுக்கு முன் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றியபொழுது இவ்வாறு கூறினார்.** அவரின் பின்

www.tamilarangam.net


நான் பேசியபொழுது "எனக்கு முன்னே பேசிய பாராளுமன்ற உறுப்பினர் தம் உடலில் துட்டகை முனுவின் இரத்தம் ஓடுகிறதென்று கூறினார். நான் என் உடலில் எல்லாளன் இரத்தம் ஓடுகிறதென்று கூறமாட்டேன்" என்று குறிப்பிட்டேன்.

எல்லாளன் தனக்குத் துணை புரியவருமாறு சோழநாட்டிலுள்ள தன் மருகன் வல்லூகனுக்கு ஓலை அனுப்பினான். எல்லாளன் இறந்தபின் வல்லூகன் முப்பதினாயிரம் வீரரைக் கொண்ட படையுடன் வந்து மாதோட்டத்தில் இறங்கித் துட்டகைமுனுவுடன் போராடி இறந்தான்.

கி.மு.முதலாம் நூற்றாண்டில் மறவ வீரர்கள் ஐவர் பெரும்படையுடன் தமிழகத்திலிருந்து இலங்கை புக்கு வாலகம்பாகு எனும் சிங்கள அரசனை வென்று பதினைந்து ஆண்டுகள் இலங்கையை ஆண்டனர்.

## சோழர் ஆட்சி

சோழ மன்னர்களுள்ளே மிகுந்த சிறப்புடன் விளங்கிய கரிகாற் பெருவளத்தான் எனும் வீரமன்னன் கி.மு.முதலாம் நூற்றாண்டில் இலங்கையை வென்று தன் சேனைத்தலைவன் ஒருவனை இலங்கையை ஆளுமாறு நியமித்தபின் பன்னீராயிரம் சிங்களக் குடும்பங்களைச் சோழ நாட்டுக்குக் கொண்டு சென்றான். இவர்களைக் கொண்டே அவன் காவிரியின் கரையைக் கட்டுவித்தான் எனக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது[3]. இச்செய்தியை இராசாவளி எனும் சிங்கள நூலும் கூறுகிறது. மகாவமிசம் கி.மு.44 முதல் கி.மு.17 வரை இலங்கை தமிழரின் ஆட்சியிலிருந்தது



என்பதை மட்டுமே உரைக்கிறது. கரிகாற் பெருவளத்தான் காலத்தில் இலங்கையிலிருந்து சோழ நாட்டுக்கு உணவுப்பொருள் அனுப்பப்பட்டது.

"ஈழத்துணவும் காழகத்தாக்கமும்"[4] எனப் பட்டினப்பாலை கூறுவதைக் காண்க.

மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டன் என்பான் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் திருக்கோண மலைக்கு வந்து தம்பல காமத்தில் பழுதடைந்து கிடந்த கோணேசர் கோவிலைப் புதுப்பித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் கூறுகின்றது.

இந்த நூற்றாண்டிலே பாண்டு என்பவனும் வேறு ஐவரும் தமிழ்நாட்டிலிருந்து பெரும்படையுடன் வந்து இலங்கையை இருபத்தேழு ஆண்டுகள் ஆண்டனர்.

எட்டாம் நூற்றாண்டில் உக்கிர சிங்கன் எனும் அரசன் பெரும்படையுடன் இலங்கைபுக்கு இலங்கையின் வடபகுதி முழுவதையும் ஆண்டான்.

ஒன்பதாம் நூற்றாண்டிலே சிறீமார சிறீவல்லபன் எனும் பாண்டிய மன்னன் இலங்கைக்கு வந்து இலங்கையிலிருந்த தமிழ் வீரரின் துணையோடு அனுராசபுரத்தைக் கைப்பற்றிப் பெருந்தொகையான பொருள்களுடன் தமிழ்நாட்டுக்கு மீண்டான்.

பத்தாம் நூற்றாண்டிலே பராந்தகச் சோழன் இலங்கைமேற் படையெடுத்தான்.

பதினொராம் நூற்றாண்டில் முதலாம் இராசராசன் இலங்கையை வென்று ஆண்டான். அவனுடைய படைகள் அனுராதபுரத்தை அழித்துவிட்டுப் பொலநறுவையைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைநகராக்கின. இராசராசன் இதற்குச் சனநாதமங்கலம் எனப் பெயரிட்டான். இங்கு அவன் ஒரு பெரிய சிவன்கோயிலைக் கட்டுவித்தான். இவனுடைய மகன் இராசேந்திர சோழன் இலங்கை முழுவதையும் வென்றான். **இலங்கை மும்முடிச்சோழமண்டலம் எனும் பெயருடன் அரைநூற்றாண்டுக்கு மேலாகச் சோழப் பேரரசின் ஒருபகுதியாக இருந்தது.** இரோசேந்திரனும் பொலநறுவையில் சிவன் - திருமால் கோயில்களைக் கட்டுவித்தான்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சோழப்பேரரசு தாழ்ச்சியுறப் பாண்டியர் தலைதூக்கினர். சிங்கள மன்னர்களும் பாண்டிய மன்னர்களும் சேர்ந்து எதிரிகளைத் தோற்கடித்தனர். சடவர்மன் சுந்தரபாண்டியனும் சடவர்மன் வீரபாண்டியனும் இலங்கை மேற் படை எடுத்து இலங்கையைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தினர்.

## யாழ்ப்பாணத் தமிழரசு

மாறவர்மன் குலசேகரன் இலங்கைமேற் படையெடுத்துவந்து தன்படையின் தலைவன் ஆரியச் சக்கரவர்த்தியை யாழ்ப்பாணத்தை ஆளுமாறு நியமித்தான். இவனுடைய ஆட்சியுடன் பதின்மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத் தமிழரசு தோன்றியது. இத்தமிழரசு பதினேழாம் நூற்றாண்டில் இலங்கையைப் போர்த்துக்கீசர் கைப்பற்றி, இரண்டாம் சங்கிலியன் எனும் யாழ்ப்பாணத் தமிழரசனைப் போரில் வெற்றிகொள்ளும் வரை நிலைத்திருந்தது. யாழ்ப்பாணத் தமிழரசர்களின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்ட யாழ்ப்பாண வைபமாலை, கைலாய மாலை, வையா பாடல் என்பனவற்றிலே



முரண்பாடுகள் பலவுள. எனினும், யாழ்ப்பாணத் தமிழரசின் காலமே தமிழர்களின் பொற்காலம் எனலாம். இடையிடையே யாழ்ப்பாண அரசர்களும் சிங்கள மன்னர்களும் மோதிக்கொண்டனர். ஆறாம் பராக்கிரமவாகு எனும் சிங்கள மன்னன் கனக சூரிய சிங்கை ஆரியன் எனும் யாழ்ப்பாண மன்னனை வென்று யாழ்ப்பாணத்தை ஆளுதற்கு சப்புமால் எனும் தளபதியை நியமித்தான். எனினும் தோற்ற சிங்கை ஆரியன் மீண்டும் அரசன் ஆனான்.

மூன்றாம் விக்கிரமபாகு எனும் சிங்கள மன்னன் யாழ்ப்பாண அரசுக்குத் திறை செலுத்தினான்.

14ஆம் நூற்றாண்டில் (1344) இவன் பற்றுடா எனும் யாத்திரிகன் யாழ்ப்பாண அரசின் ஆட்சியின் மாட்சியையும், யாழ்ப்பாண அரசின் ஆட்சிப் பரப்பையும் விரிவாகக்குறிப்பிட்டுளன்.

யாழ்ப்பாண அரசர் காலத்திலே தமிழ்மொழியும் சிறப்புற்றோங்கியது. தமிழ்ச் சங்கமும் சரசுவதி மகாலயமும் யாழ்ப்பாணத்துக்குப் பெருமைசேர்த்தன. செயவீர சிங்கை ஆரியன் எனும் மன்னன் காலத்தில் செகராசசேகரமாலை எனும் சோதிட நூலும், கணக்கதிகாரம் எனும் கணிதநூலும் செகராசசேகரம்எனும் மருத்துவ நூலும் தோன்றின.

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குணவீர சிங்கையாரியன் காலத்தில் பரராசசேகரம் எனும் மருத்துவநூல் தோன்றிற்று. இம்மன்னனுடைய மைத்துனராகிய அரசகேசரி இரகுவமிசமெனும் நூலை இயற்றினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை 1947 வரை போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியின் நிருவாகம் பெரும்பாலும் தமிழரிடமே இருந்ததெனலாம். தமிழர்கள் பலர் அரசின் உயர்பதவிகளிலிருந்தனர். இவர்களில் பொன் இராமநாதன், பொன் அருணாசலம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1944இல் தமிழும் சிங்களமும் நாட்டின் ஆட்சிமொழிகளாக்கப்பட்டன. பன்னிரண்டு ஆண்டுகளின் பின் 1956இல் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக்கப்பட்டது. இதனாலும் தமிழர் நிலத்தையும் உரிமைகளையும் பறிக்கும் சிங்கள அரசின் பன்முக முயற்சிகளாலும் தமிழரும் சிங்களவரும் மோதும் சூழ்நிலைகள் உருவாகின. **தமிழரின் ஆட்சி உரிமைப் போராட்டம் தொடர்ந்து நடக்கிறது.**

இலங்கைத் தமிழர் தம் நாட்டை ஆண்ட இனம் என்பதை இந்தியாவிலுள்ள பலர் அறியாமலிருக்கின்றனர். எனினும் தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் தம் நாட்டை - தமிழ் ஈழத்தை - மீட்டு ஆளுதற்கு உயிர் கொடுத்துப் போராடுகிறார்கள் என்பதை இன்று முழு உலகமும் நன்கறியும்.

★★★

1. திருவாசகம் - 182
2. எல்லாளனின் புறக்காவல் அரண்களையும் அவற்றைக் காத்த படைகளையும் வெல்லுதற்குத் துட்டகை முனுபலமாதங்கள் போராடினான். - The military History of Ceylon Anton Muttukkumar
3. கலிங்கத்துப்பரணி - தா. 26
4. பட்டினப்பாலை அடி - 12

# இலங்கையின் பழங்குடியினர் தமிழரே

இவ்வுலகிலுள்ள நாடுகளில் இலங்கையே மிகத்தொகையான பெயர்களை உடைய நாடாக விளங்குகிறது. ஈழம், இரத்தின தீபம், இலங்காதீபம், ஈழமண்டலம், சலாப தீபம், சிங்களம், சிலோன், சிரிகுவோ, சிலியாவோ, தம்பபண்ணை, தாபிரபன்ன, பாலாசி முண்டு மும்முடிச் சோழமண்டலம் முதலியன குறிப்பிடத்தக்கன. இப்பெயர்களைப் புலவர்கள் மட்டுமன்றி மேலை நாடுகளையும் கீழைத்தேயங்களையும் சேர்ந்தவாணிகரும் யாத்திரிகரும் வழங்கியுள்ளர். இவற்றுள் 'ஈழம்', இலங்கை எனும் பெயர்களே மிகுந்த பழமையுடையன என்பர்.

இலங்கை எனும் பெயர் வான்மீகியின் இராமாயணத்திலும் பழந்தமிழ் நூல்களிலும் காணப்படுகிறது. இப்பெயரே இலங்கையில் வாழும் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் எனபோர் நாவில் இன்று வரை பெரிதும் நிலவி வருகிறது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் விசயன் இலங்கையின் தொல்குடிகளில் ஒரு பிரிவினரான இயக்கர்களை வென்று அரசனான பொழுது இயக்கர்களின் தலைநகர் இலங்காபுரம் எனவே வழங்கிற்று என்று மகாவமிசம்[1] எனும் நூல் கூறுகிறது.

## இராமாயண இலங்கை

இலங்கையைப் பற்றியும், அதனை ஆண்டமாபெரும் வீரனான இராவணனைப் பற்றியும், இராமயணம் விரித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரைக்கின்றது. இராம கதையை உண்மையான கதை எனப் பலர் கருதுவதில்லை. இராமன் இராவணனோடு செய்த போர் ஆரியர் திராவிடரோடு நடத்திய போர் எனக் கொள்வாருமுளர். இராமகதையின் உண்மை எத்தகைய தெனினும் இராமாயணத்திற் கூறப்படும் பல நாடுகள் நகரங்கள், ஆறுகள், கடல் முதலியன கற்பனைகள் அல்ல என்பதை எவரும் மறுத்தல் சாலாது. எனவே, இலங்கையின் நிலையம்பற்றி இராமாயணம் கூறுபவற்றை ஒதுக்கித்தள்ள முடியாது. இலங்கை இந்தியாவுக்குத் தெற்கே இருந்ததென்பதும், அஃது ஒடுங்கிய கடலாற் பிரிக்கப்பட்டிருந்த தென்பதும், எவரும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே. இவற்றுக்கு இராமாயணம் மட்டுமன்றிப் பாரதமும் புராண நூல்களும் மகாவமிசமும் பழந்தமிழ் நூல்களும் சான்று பகர்கின்றன. இந்நூல்களும், இந்தியாவிலும் இல்ங்கையிலும் வழிவழியாக வழங்கிவரும் பழங்கதைகளும் இப்பொழுதுள்ள இலங்கை, இராமாயணத்திற்கூறப்பட்ட இலங்கையின் ஒருபகுதியே என்பதை எவ்வித ஐயத்துக்குமிடமின்றிப் புலப்படுத்துகின்றன. இலங்கைக்கும் தென் இந்தியாவுக்கும் இடையிலுள்ள சேது அணை இராமர் அணை எனவும் வழங்கப்படுகிறது.

## தனுக்கோடி ஆலமரம்

இராமர் தனுக் கோடி வழியாக இலங்கையை அடைந்தார் என்பதை வலியுறுத்தும் சான்று ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்குமுற்பட்ட அகநானூற்றுப் பாடல் ஒன்றிலுளது. தனுக்கோடியிலுள்ள ஆலமரம் ஒன்றின் கீழிருந்து இராமர் இலங்கைமீது படைஎடுப்பதுபற்றி



ஆராய்ந்தார் எனவும், அவ்வாறு செய்தற்குமுன் அவர் அம்மரத்திலிருந்த பறவைகளின் ஒலியை அடக்கினார் எனவும் அப்பாடல் சுடறுகிறது.

''வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிடும் பௌவம் இரங்கு முன்துறை
வேல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம்போல்''

என்பதே இச்செய்தியைக் குறிக்கும் அப்பாடற் பகுதியாகும். இதனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுக்கு இச் செய்தி தெரிந்துளது என்பது நன்கு புலனாகின்றது. இராமேசுவரக் கோயிலை இராமரே நிறுவினர் என்பதைப் புலப்படுத்துங் குறிப்புக்கள் தேவாரத்திலுமுள. திருகோணமலையிலுள்ள கோயில் இராவணனோடு இணைத்துப் போற்றப்படுகிறது. இலங்கையிலே தமிழ்மக்கள் வாழும் பகுதிகளிலும் இராமாயணத்தோடு தொடர்புடைய கதைகளும் இடப்பெயர்களும், காணப்படுகின்றன. இராவணன் வெட்டு, குட இராவணன் கோட்டை, சீத்தலான, சீதாகந்தை, சீதாகுண்ட, சீதாவாக்கை, திரிகூடம், நிரும்பில, புலத்திய நகரம், மகா இராவணன் கோட்டை முதலியவை காண்க. இராவணன் தம்பி விபீடணனை இன்றும் சிங்கள மக்கள் வழிபடுகின்றனர்.

## தொல் இலங்கையும் பிற இலங்கைகளும்

பழந் தமிழ் நூல்கள் இலங்கையை 'ஈழம்' எனவும் ''இலங்கை'' எனவும் வழங்கியிருக்கின்றன. இலங்கை மிகப் பழையதொரு நாடு என்பதை அக்காலத்திருந்த

www.tamilarangam.net



தமிழ்மக்கள் நன்கறிந்திருந்தனர். பழந் தமிழ்ப்புலவர்களும் இலங்கையின் பழமையைப் போற்றியுள்ளர். ''தொன்மா விலங்கை'' எனச் சிலப்பதிகாரமும் ''பெருமூதிலங்கை'' என ஆசிரியமாலையெனும் பழைய நூலும் குறிப்பிடுகின்றன.

தென்னிந்தியாவிலும் இலங்கை எனும் பெயருடைய நாடு இருந்தது என்பது ''தொன்மாவிலங்கைக் கருவொடு பெயரிய நன்மாவிலங்கை'' எனும் சிறு பாணாற்றுப்படை அடிகளாற் புலப்படுகிறது. புறநானூற்றிலுள்ள வேறொரு பாடல் ''மாவிலங்கை'' என்றுரைக்காமல் ''இலங்கை'' என்றே தமிழகத்திலுள்ள இம்மாவில்ங்கை நாட்டைக் குறிக்கிறது. இதனால் ''மாவிலங்கை'' என்பதிலுள்ள 'மா' அடைமொழி என்று கொள்ள இடமுண்டு. இந்தியாவில் பல மாவிலங்கைகள் உள எனவும் ''கீழ்நாட்டு மாவிலங்கை'', ''நடு நாட்டு மாவிலங்கை'' எனும் பெயர்கள் இன்னுமொரு மாவிலங்கையுண்டென்பதைப் புலப்படுத்துகின்றன எனவும் கிருட்டினசுவாமி ஐயங்கார் உரைத்துள்ளர்.

இச்சான்றுகளினாலே, இலங்கையைப் பழந்தமிழ் மக்கள் நன்கறிந்திருந்தனர் என்பதும், பழம் நாடாகிய தென்பாண்டி நாடு போல் இலங்கையும் பழமையுடையதொரு நாடாக இருந்தது என்பதும், இலங்கையின் பெயரையுடைய நாடுகள் தமிழ் நாட்டிலும் இருந்தன என்பதும், பழைய இலங்கையின் பெயரைத் தமிழகத்து நாடுகளுக்கு வைக்கத்தக்க உறவும், கடப்பாடும், ஒற்றுமையும், கொள்வனவும் கொடுப்பனவும் தமிழகத்துக்கும் இலங்கைக்கும் அக்காலத்தில் இருந்தனவென்பதும் நன்கு புலனாகின்றன.



சிறுபாணாற்றுப் படை கூறும் மாவிலங்கையில் வாழ்ந்தவர்கள் அக்காலத்தில் இலங்கையின் கரைப்பகுதிகளில் வாழ்ந்த நாகர் இனத்தைச் சேர்ந்த ஓவியர் குடியினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையிலிருந்து அங்கு சென்று குடியேறியவர்கள் அதற்குத் தங்கள் தாய்நாட்டுப் பெயரையிட்டு வழங்கியுமிருக்கலாம். பழங்காலத்தில் மக்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறியதற்கு மட்டுமன்றி இலங்கையிலிருந்து தமிழகத்துக்குப் பலர் சென்று வாழ்ந்தனர் என்பதற்கும் பல சான்றுகள் உள.

## ஈழம் - இலங்கை :

''இலங்கை'' எனும் தமிழ்ச் சொல்லே 'லங்கா' எனும் சமக்கிருதச் சொல்லாக மாறிற்று எனலாம். இலங்கை எனும் தமிழ்ச்சொல்லின் அடி 'இலங்கு', என்பதாகும். இலங்குதல் என்பது ஒளிர்தல் எனும் பொருளது. சமக்கிருதத்திலும் 'லங்கா' என்பதற்கு ஒளியுடையதென்பதும் பொருளாகும். இலங்கையைக் குறிக்கும் மற்றொரு பழந் தமிழ்ச் சொல்லாகிய 'ஈழம்' என்பது பொன் எனும் பொருளது. பொன் போல் இலங்கியதால் இலங்கை 'ஈழம்' எனவும் போற்றப்பட்ட தெனல் சாலும், ஈழம், இலங்கை எனும் இரு சொற்களும் பொருள் ஒற்றுமையன்றி ஒலி ஒற்றுமையு முடையன. ஈழம் எனும் சொல்லே இலங்கையாகவும் மாறியிருக்கலாம். இந்துக்கள் இலங்கையை சீயலி தீபம் சீலத்தீவு - என்று வழங்கினர் என்பர். இத்தொடர்கள் ''ஈழம்'' எனும் சொல்லிலிருந்தே தோன்றியிருத்தல் வேண்டும். இதனையே பின்னர் சிலியாவோ, சிலன், சிலோன் என்று மேனாட்டார் கொண்டனா. சங்ககாலந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடக்கம் இன்றுவரையும், ஈழம் எனும் சொல்லும் வழக்கிலுள்ளது. சங்க நூலாகிய பட்டினப்பாலையில் 'ஈழத்துணவு எனுந் தொடர் காணப்படுகிறது. கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டொன்றிலும் ஈழம் இடம் பெற்றுள்ளது. பெருங் கதை எனும் நூல் ''இலங்கையீழத்துக் கலந்தரு செப்பும்'' என இவ்விரு பெயர்களையும் சேர்த்துக் கூறுகிறது. சோழ பாண்டிய வேந்தர்களுடைய சாசனங்களிலே இவ்விரு சொல்லும் பயின்றுள.

## இயக்கரும் நாகரும்.

மிகுந்த பழமைவாய்ந்து விளங்கும் இவ்விலங்கையிலே சரித்திர காலத்துக்கு முன்னர் வாழ்ந்தவர்களைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள. எனினும் இயக்கர்களும் நாகர்களும் மிகப் பழங்காலந் தொட்டு இலங்கையில் வாழ்ந்தனர் என்பது பலசான்றுகளால் நன்கு புலனாகிறது. கீழ் மாகாணத்திலுள்ள பம்பரகத்தலவாவிற் காணப்பட்டதும் கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்குரியதுமான குகைக்கல் வெட்டு நாகர் குலப் போர் வீரன் ஒருவனைக் குறிக்கிறது. மிகப் பழைய வரலாறுகளை உரைக்கும் இராயணம் இலங்கையில் இயக்கர்கள் வாழ்ந்தனர் என்று கூறுகிறது. இயக்கர், இராட்சதர் எனும் இரு சொல்லும் ஓரினத்தையே குறிப்பிடுகின்றன. இராமாயண காலத்தில் இந்தியாவிலும் இல்ங்கையிலும் வாழ்ந்தவர்கள் ஆரியர்களும் திராவிடர்களுமேயாவர். இராவணனும் ஏனைய இயக்கர்களும் நாகர்களும் ஆரியர்களல்லர் என்பதும் திராவிடரே என்பதும் சிலருடைய கருத்தாகும்.



தமிழிலிருந்து திராவிட மொழிகள் பிரிந்து கிளை மொழிகளாவதற்கு முன்னர் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் யாவா முதலிய கீழைத்தீவுகளிலும் வழங்கிய மொழி தமிழேயாகும். இவ்விடங்களில் வாழ்ந்தவர்கள் புத்தசமயத்தைத் தழுவுதற்கு முன் தமிழ்நெறியாகிய சைவ நெறியினைத் தழுவித் தமிழ் நாட்டுத் தெய்வங்களாகிய சிவன், முருகன், திருமால் முதலானோரையே வணங்கினர். எனவே இயக்கர்கள் நாகர்கள், என்போரைத் தொல்குடித் தமிழரைப் போன்று தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு சிவ நெறியைத் தழுவி வாழ்ந்தவர்கள் எனலாம். இயக்கர்- நாகர் குலமன்னர்மகளிரைத் தமிழ் அரசரும் சிங்கள வேந்தரும் மணந்த செய்திகளும் சிலவுள.

## தமிழரும் தென் திசையும்:

இயக்கரும், நாகரும் தொல்குடித் தமிழரும் ஓர்இனத்தையே தாயினமாகக் கொண்டவர்கள் எனவும் கொள்ளுதல் சாலப் பொருத்தமானது. தமிழகத்தில் மிகப் பழங்காலத்தில் வேறின மக்கள் வாழ்ந்தனர் என்பதையும் வேறு மொழி வழங்கிற்று என்பதையும் குறித்தற்கு எவ்வித சான்றுமில்லை. தமிழினம் தமிழ் நாட்டின் ''கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே...முற்றோன்றிமூத்தகுடி'' என்பதே தமிழகத்தில் பண்டு தொட்டு இன்றுவரையும் வழிவழியாக நிலைத்து நிற்கும் கொள்கையாகும். இதனைப் பழந்தமிழ் நூல்கள் நன்கு விளக்குகின்றன. வேதங்கள் முதலிய வடமொழி நூல்களில் வல்லவர்களும் வைதிகக் கொள்கைகளையும் புராணக் கதைகளையும் நன்கு தழுவினவர்களுமான நச்சினார்க்கினியர்,

www.tamilarangam.net



பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களுடைய கூற்றுக்களும் இதனை வலியுறுத்துகின்றன. ''வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும்'' எனும் திருக்குறளில் உள்ள 'பழங்குடி' என்பதற்கு உரைவிரித்த பரிமேலழகர் ''தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியர் என்றார் போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவருதல்'' என்றார். வடமொழி நூல்களும் தமிழரையும் தமிழையும் தென்றிசையோடுதான் சேர்த்துக் கூறுகின்றன. அன்றியும் ''தென்புலத்தார்'' ''மாதவம் செய் தென்திசை'' ''தென்மதுரை'' ''தென்நாட்டவன்'' ''தென்னன் தமிழ்'' ''என்றுமுள தென்றமிழ்'' ''தென்னாடுடைய சிவன்'', ''கன்னித் தென்கரை'', ''தென்னிலங்கை'', ''தென்மொழி'' ''தென்னல்'' ''தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை'' முதலிய பல வழக்குகள் இலங்கையுள்ளிட்ட தெனபுலமே தொல் குடித் தமிழரோடு முதலில் தொடர்பு பட்ட பகுதி என்பதை நன்கு புலப்படுகின்றன.

உலகின் மூத்தகுடி-முதற்குடி தமிழரே என்பதும், இப்பொழுதுள்ள குமரி முனையின் தெற்கேயிருந்த கடல் கொண்ட குமரிக் கண்டமே உலகில் மக்களினம் தோன்றிய முதலிடம் என்பதும் இன்று நன்கு புலனாகின்றன. **தமிழ் மக்கள் தோன்றிய இக்குமரிக்கண்டத்தின் எஞ்சிய ஒருபகுதி கடலினாற்பிரிக்கப்பட்டு இலங்கையாகியது.**

இலங்கையின் வடபகுதியிலுள்ள வேலணை, காரைநகர், ஆனைக் கோட்டை எனுமிடங்களில் அகழ்வாராய்விற்கிடைத்த பொருள்கள் இலங்கையில் இடைக் கற்காலப்பகுதியில் 28,000 ஆண்டுகளுக்கு முன் தமிழ்மக்கள் வாழந்தனர் என்பதையும் இவர்கள் அக்காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்த



தமிழ்மக்களுடன் பண்பாட்டுத் தொடர்புடையவர் களாயிருந்தனர் என்பதையும் புலப்படுத்துகிறது[4]

## சுவர்க்கமும் பாதாளமும்.

உலகில் ஆறுபெரும் மக்கள் இனம் உள. இவற்றில் இருபெரும் இனத்தவரே ஆரியரும் திராவிடரும் எனபர். ஆரியர்கள் வடக்கு, மேற்குத் திசைகளோடும் திராவிடர் தெற்கு, கிழக்குத் திசைகளோடும் பெரிதும் தொடர்புடையர். இதனாலேயே ஆரியருடைய புராணங்கள் அவர்களை 'வானவர்கள்' எனவும் 'மேலவர்கள்' எனவும் இயக்கர், நாகர் முதலானவர்களை 'பாதாளத்தவர்' 'கீழ்ப்பகுதியினர்' எனவும் குறிப்பிட்டன. இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்த ஆரியர்களுக்கு அதன்தென்பகுதிகள் பாதாளமாகத் தோன்றியிருக்க வேண்டும். தெற்கேயுள்ள நாகநாட்டுக்கு ஓர் அரசன் சென்று நாக கன்னிகையை மணந்ததை நச்சினார்க்கினியர் ''பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாக கன்னிகையைப் புணர்ந்த காலத்து'' என்று உரைத்துளர். ''மேலது வானத்து மூவா நகரும் கீழது நாகர் நகரும் புடையன திசைகாப்பளர் தேயக்குறும்பும்'' எனும் ஆசிரிய மாலைப்பாடற் பகுதியையும் நோக்குக.

இலங்கையின் பழங்குடிகளைப்பற்றிக் கூறும் மகாவமிசம், மணிமேகலை முதலிய நூல்களிற் சிலவும் பிறநாட்டு யாத்திரிகர்களுடைய சுவடிகளும் இயக்கர்களையும் நாகர்களையும் மட்டுமன்றி வேடர்களையும் இலங்கையின் பழங்குடிகளாகக் குறிப்பிடுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வேடர்கள்.

சிங்களவர் தம்முடைய முதலரசன் எனக் கொண்டாடும் விசயனுக்கு இயக்கர் குலத் தலைவியாகிய குவேனியிடத்துப் பிறந்த பிள்ளைகளின் பரம்பரையினரே வேடர் என மகாவமிசம் உரைக்கிறது. சீர் திருந்தாத நிலையிலே ஊரோடிகளாக இன்றும் வாழும் இவ் வேடர்கள் இலங்கையில் விசயன் காலத்தின் பின்னரும் காணப்பட்டதற்குக் காரணங்கூற வேண்டியிருந்ததால் மகாவமிசம் இவ்வாறு கற்பித்து உரைத்தது. உலகத்தின் பல பகுதிகளில் இன்றும் நாகரிகம் அடையாது வாழும் தொல் குடிமக்களினம் பலவுள. அவற்றைப் போன்ற தோரினத்தைச் சேர்ந்தவர்களே இவ்வேடர்கள். இவர்களும் தென்னிந்தியக்காடுகளில் வாழும் இருளர், குறும்பர் முதலியவர்களை ஒத்த திராவிட இனத்தவர்களேயாவர். இவர்களை அவுத்திரோலோயிட்டு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பாருமுளர்.

## விசயனுக்கு முந்திய தமிழர்.

ஆரியர்களல்லாதவரும் திராவிட இனத்தவர்களுமான இயக்கர்கள் நாகர்கள் வேடர்கள் என்போருடன் சரித்திர காலத்துக்கு முன்னும் பின்னும் இலங்கையிலே தமிழர்களும் வாழ்ந்து வந்தார்கள் என்பது ஆராயப்பட வேண்டியதன்று. தமிழகத்துடன் ஒன்றாயிருந்து பின்னர்ப் பிரிந்த இலங்கையிலே தமிழகத்திற் பண்டு தொட்டு வாழ்ந்து வந்தவர்களும் திரை கடலோடித்திரவியம் தேடுவதிற் புகழ் பெற்றவர்களுமான தமிழ் மக்கள் வாழ்ந்திருப்பார்கள் என்று கூறுதற்குத் தமிழகத்துக்கு



அண்மையில் இலங்கை அமைந்திருப்பது ஒன்று மட்டுமே போதுமானது. இந்த அண்மையினையும் தமிழகத்தை இலகுவில் அடையக்கூடிய தன்மையினையும் புலப்படுத்தும் முறையில் தமிழகத்தை மகாவமிசம் 'அடுத்தகரை' 'எதிர்க்கரை' 'அப்பாற்கரை' என்று குறிப்பிடுகிறது. அன்றியும் இலங்கையின் பழமையைத் தமிழ் மக்கள் ஈராயிரம் ஆண்களுக்கு முன்னரே அறிந்திருந்தனர் என்பது பழந் தமிழ் நூல்களால் நிலைநாட்டப் படுகிறது.

ஆரியர்கள் தென்னாடு நோக்கிப் புறப்படத் தொடங்கிய காலம் கி.மு.ஆயிரம் ஆண்டளவில் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆரியர்கள் இலங்கைக்கு கி.மு.ஆறாம் நூற்றாண்டளவிலேதான் வந்தனர். இதற்கு முன் தமிழர் இயற்கை வளங்கள் நிறைந்த இலங்கையிலே குடியேறி நிலைத்து வாழ்நதிருந்தார்கள் என்பதனை நிறுவச் சான்றுகள் தேவையில்லை. இவ்வுண்மையினை இலங்கைச் சரித்திரத்தை ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் எடுத்துரைத்துள்ளனர். இவர்களுள்ளே போல். பீரிசு, எமேசன், தென்னற்று, இடபிள்யு. எ.எம்.போக்கு, வேட்டோலாச்சி, கலாநிதி ஆரியபாலா, கலாநிதி சி.மென்டிசு முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## மாதோட்டமும் தமிழ்வாணிகரும்.

கடல் வாணிகத்தில் ஈடிணையற்று விளங்கிய தமிழர்களே இலங்கையிலும் வாணிகத்தை நடத்தினர். அநுராதபுரத்தில் கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் தமிழ்வாணிகர் வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுக்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலப்படுத்துகின்றன. தமிழர்களின் தொடர்பாலேயே உரோமர்களும், அராபியர்களும், சீனர்களும், இலங்கையோடு வாணிகம் செய்ய முற்பட்டனர் என்பது சரித்திரம் புலப்படுத்தும் உண்மையாகும். மன்னாருக்கு அண்மையிலுள்ள மாதோட்டம் மிகப் பழங்காலத்திலேயே தமிழரின் வாணிக நிலையமாக விளங்கிற்று. இதனை 'மாந்தை' எனப் பழந்தமிழ் நூல்களும் 'மகாதித்த'[3] என மகாவமிசமுங் கூறுகின்றன.

அக்கால வாணிக உலகம் நன்கு அறிந்த துறைகளுள் இது தலைசிறந்தது. காவிரிப் பூம்பட்டினத்தைப் போல இங்கும் தமிழரோடு பிறநாட்டு வாணிகர்களும் வாழ்ந்தனர். அழிந்து சிதைந்து போன இந்நகர் இருந்த இடத்தில் எடுக்கப்பட்ட அகழ்வுப் பொருள்களில் உரோம். அராபியா, சீனா, முதலிய நாடுகளின் மட்பாண்டங்களும் உள. இலங்கையின் தனித்துறை முகமாகப் பல நூற்றாண்டு காலம் சிறப்புற்றிருந்த இந்நகர் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டளவிலேயே மங்கி மறையத் தொடங்கிற்று. கி.மு ஆறாம் நூற்றாண்டில் விசயன் வேண்டு கோளுக்கு இணங்கி இலங்கை வந்த பாண்டியன் மகளும் சுற்றமும் இத்துறையிலேயே இறங்கினர் என்பர். எல்லாளனுடைய மருகன் தன் பெரும் படையுடன் கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இத்துறையிலேயே இறங்கினான்.

## கி.மு 1200 முன் தமிழர்

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிச்ச நல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கட்டாழிகள் கி.மு. 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். இத்தகைய தாழிகள் இலங்கையிற் புத்தளத்துக்கு அண்மையிலும் அகழ்த்து எடுக்கப்பட்டுள. இஃதொன்றே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகள் இலங்கையில் நிலைத்திருந்தமையை நன்கு புலப்படுத்துகின்றது. ஆதிச்ச நல்லூர் தாமிரபருணி ஆற்றின் கரையில் உள்ளது. இத் தாமிரபருணியை வான்மீகியும், வியாசரும் தங்கள் நூல்களிலும் குறிப்பட்டுளர். இந்த ஆற்றின் அயலில் உள்ள மக்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் புத்தளம் மன்னார்ப் பகுதிகளில் குடியேறிய பொழுது தமது புதுக்குடியிருப்புக்கு தம்முடைய ஆற்றின் பெயராகிய தாமிரபருணியையே இட்டு வழங்கியிருக்கலாம். பின்னர் அப்பெயரே விசயன் காலத்தில் தம்பண்ணை என மருவியிருத்தல் கூடும். இன்றும் இலங்கையின் வட பகுதியில் உள்ள நல்லூர், திருநெல்வேலி எனும் ஊர்ப் பெயர்கள் தமிழகத்திலுள்ள ஊர்களின் பெயர்களாக இருக்கின்றன. ஒரு நாட்டை விட்டு வேறொரு நாட்டில் குடியேறியவர்கள் தங்கள் முன்னைய நாடு நகரங்களின் பெயரைப் புதிய இடங்களுக்கு வைப்பது உலகெங்கும் நிலவும் ஒரு வழக்கமாகும்.

**கந்தரோடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பழைய நாணயங்களும் விசயன் காலத்துக்கு முன் இலங்கையின் வட பகுதியில் மக்கள் பல்லாண்டுகள் வாழ்ந்தனர் என்பதை நன்கு புலப்படுத்துகின்றன.**

## கல்வெட்டுச் சான்றுகள்.

புத்தசமயம் இலங்கையில் பரவுவதற்கு முன் பிராமி எழுத்துக்கள் இலங்கையில் இருந்தன என்பதும், இலங்கைக்கு வந்த மக்கள் கூட்டங்களில் ஒரு பெரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டத்துக்குத் தலைவனாகவே விசயன் வந்தான் எனபதும், காம்போச நாட்டில் இருந்தும் சில குடும்பங்கள் கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் இலங்கைக்கு வந்து வதிந்தன என்பதும், கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்குரிய குகைக்கல்வெட்டுக்களால் நன்கு புலனாகின்றன.

தமிழர் எனும் சொல் இக்காலக் கல்வெட்டுக்களிலே காணப்படுகிறது. ''தமிழ் வணிகன் விசாக(ன்) எனும் இல்லறத்தானுடைய குகை'' என்பது ஒரு கல்வெட்டில் உள்ள செய்தியாகும்.

இலங்கையின் வடக்குப் பகுதிகளில் மட்டுமன்றி அநுராதபுரப்பகுதியிலும் தமிழ் மக்கள் கி.முன்னும், பின்னும் பன்னூறு ஆண்டுகள் தொடர்ந்து நிலைத்து வாழ்ந்தனர் என்பதை இக்கல்வெட்டுக்களோடு கி.பி.முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த அனுலா எனும் அரசியின் காதலர்களைப் பற்றி மகாவமிசம் கூறும் செய்தியும் நன்கு நிலைநாட்டுகிறது. அனுலாவின் காதலர்களில் இருவர் தமிழர். இவர்களில் ஒருவன் அநுராதபுரத்திலிருந்த வடுகன் எனும் பெயருடைய தச்சன். மற்றையவன் நீலியன் எனும் அரண்மனைக்குரு. இவர்கள் இருவரும் அனுலாவின் காதலர்களாகி இலங்கையை ஈராண்டு ஆண்டனர். இரு தமிழர் ஒரு சிங்கள அரசியின் காதலர் ஆகினர் எனின் அக்காலத்தில் தமிழர்கள் அநுராதபுரத்தில் சிறப்புடனும் செல்வாக்குடனும் நிலைத்துப் பல்கிப் பெருகி வாழ்ந்திருக்க வேண்டுமன்றோ !

விசயனுக்குப் பின்னர் ஏறக்குறைய ஒவ்வொரு நூற்றாண்டிலும் தென் இந்தியாவில் இருந்து தமிழர்கள் படையெடுத்து வந்து இலங்கையை வென்று ஆண்டுளர்.



எனவே இவர்கள் விசயனுக்கு முன்னரும் படையெடுத்திருப்பர் என்பதும் வரலாற்றுக்கு இசைந்த உண்மையேயாகும்.

## விசயனும் பாண்டியன் மகளும்.

விசயன் இலங்கைக்கு அரசனானவுடன் பாண்டிய அரசனுக்குத் தூது அனுப்பிப் பாண்டியன் மகளைத் தனக்கு மனைவியாகத் தரும்படி வேண்டினன் என்று மகாவமிசம் கூறுகிறது. இதனை இலங்கைச் சரித்திர ஆராச்சியாளர் பலரும் ஏற்றுக்கொண்டனர். இச் செய்தி பல உண்மைகளைப் புலப்படுத்துகின்றது. விசயன் காலத்திலே இலங்கைக்கும் பாண்டி நாட்டுக்கும் கொள்வனவு கொடுப்பனவு இருந்தன என்பதும், விசயன் இலங்கையில் வாழ்ந்த தமிழரிடமிருந்தே பாண்டிய மன்னனைப் பற்றி அறிந்தான் என்பதும், தமிழர்களே பாண்டியனிடம் தூது சென்றிருப்பார்கள் என்பதும், தமிழர் வாழாத ஒரு நாட்டுக்குத் தன் மகளை அனுப்பப் பாண்டியன் இசைந்திருக்க மாட்டான் என்பதும் பிறவும் இதனால் புலனாகின்றன. பாண்டியன் மகளுடன் எழுநூறு பெண்களும் பதினெட்டு வகையான தொழில்களில் ஈடுபட்ட ஆயிரம் குடும்பங்களும் இலங்கைக்கு வந்தனர் எனவும் மகாவமிசம் கூறுகிறது. இவர்கள் இலங்கைக்கு வந்து தங்கள் தாய்மொழியாகிய தமிழ் மொழியினைத் தான் பேசி வாழ்வு நடத்தியிருப்பர் என்பதில் ஐயமில்லை.

## கி.மு.இலங்கையில் தமிழர் ஆட்சி

' கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்குரிய, தென்னிந்தியக் கல்வெட்டு ஒன்று ஈழத்திலிருந்து சென்ற ஒரு குடும்பத்

www.tamilarangam.net



தலைவனைப்பற்றிக் குறிப்பிடுகிறது. அனுராதபுரத்தில் காணப்பட்ட இரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று தமிழ் வாணிகர் கூட்டமொன்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது, இக் கூட்டத்தின் தலைவர் ஒருகப்பலின் தலைவன் எனவும் அது கூறுகின்றது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேனன் கூட்டிகன் எனும் இரு தமிழ் வாணிகர்கள் இலங்கையை வென்று இருபது ஆண்டு அரசாண்டனர்.

இந்நூற்றாண்டின் இறுதியில் இலங்கையை எல்லாளன் எனும் சோழ நாட்டுப் பெருமகன் நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆண்டான். அறநெறி வழுவாத அரசனாக இவனையாவரும் போற்றுகின்றனர். இவனை வென்ற துட்டகைமுனு எனும் சிங்கள அரசன் இலங்கை முழுவதையும் தன்னாட்சிக்குக் கீழ் கொண்டுவருவதற்கு முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்களை வென்றான் என மகாவமிசம் கூறுகிறது. இதனால் கிறித்துவுக்கு முன்னரே இலங்கையின் பெரும்பகுதியில் தமிழரும் தமிழ்ச் சிற்றரசரும் வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் சிற்றரசர்களைப்பற்றியும் குறிப்பிடுகின்றன. எல்லாளன் உதவி நாடித் தன் மருமகனுக்குத் தூதனுப்பினான் எனவும் அவனுடைய மருமகன் வல்லூகன் முப்பதினாயிரம் வீரர் கொண்ட படையுடன் மாதோட்டத்தில் இறங்கித் துட்டகைமுனுவுடன் போராடி இறந்தான் எனவும் இலங்கைச் சரித்திரம் கூறுகிறது. அந்தப் பழங்காலத்திலே முப்பதினாயிரம் படைவீரர் ஒரே காலத்தில் இலங்கைக்கு வந்தார்கள் எனின், இலங்கைக்கும் தமிழகத்துக்குமுள்ள தொடர்பையும், போக்கு வரத்து வசதிகளையும் விளக்குவதற்கு வேறு சான்றும் வேண்டுமா?



கி.மு.முதலாம் நூற்றாண்டில் மறவவீரர்கள் ஐவர் பெரும்படையுடன் இலங்கைபுக்குச் சிங்கள மன்னனை வென்று பதினைந்து ஆண்டுகள் இலங்கையை ஆண்டனர். இந்நூற்றாண்டின் இறுதியில் கரிகாற் பெருவளத்தான் எனும்சோழ மன்னன் இலங்கையை வென்று தன் சேனைத் தலைவனை இலங்கையை ஆளுமாறு பணித்துப் பன்னீராயிரம் சிங்களக்குடிகளைச் சோழநாட்டுக்குக் கொண்டுசென்றான்.

இப்படையெழுச்சிகள் யாவும் கிறித்துவுக்கு முன் இலங்கையில் தமிழருக்கிருந்த இனத் தொடர்பையும், தமிழர் ஆட்சியையும், உரிமையையும், நாட்டத்தையும் நன்கு காட்டுகின்றன. இடையிடையே தமிழர்கள் இலங்கைக்கு வந்து முன்னிருந்த தம் இனத்தவரைப்பெருக்கினார்கள் என்பதையும் இவை புலப்படுத்துகின்றன.

## தமிழும் சமயமும்

தமிழ் மொழியும் இக்காலப்பகுதியில் இலங்கையில் வளமடைந்து விளங்கிற்று. மதுரையில் சிறந்தோங்கிய தமிழ்ச் சங்கத்தினை ஈழத்திலிருந்து சென்ற புலவர்களும் அணிபெறச் செய்தனர். ஈழத்துப் பூதன்தேவனார் எனும் புலவர் பாடிய பாடல்கள் சங்க நூல்களிலுள. தமிழகத்திற் சங்ககாலத்தில் வழங்கி இப்பொழுது வழக்கிறந்தபல தமிழ்ச் சொற்கள் இன்றும் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் வழக்கிலுள.

சமயத்துறையிலும் தொல் இலங்கை தமிழருடைய தனிநெறியாகிய சிவ நெறியினை - சைவசமயத்தை -

www.tamilarangam.net

உடைய நாடாக விளங்கிற்று. இராவணன் ஒரு சிறந்த சிவனடியான் என்பதும் அவனுடைய மனைவி மண்டோதரிக்குச் சிவபெருமான் அருள் புரிந்தார் என்பதும் பழந்தமிழ் நூல்களாலும் பிறவற்றாலும் நன்கு அறியப்படுகின்றன. திருமூலரும் இலங்கையைச் சிவபூமிகளில் ஒன்றெனப் பாடியுள்ளார். திருக்கோணமலை இயக்கர்களோடு தொடர்புபட்டதாயிருப்பதைப்போல மாதோட்டத்துக்கு அயலில் தோன்றிய திருக்கேதீசுவரம் நாகர்களோடு தொடர்புபட்டதாயிருக்கிறது. இவ்விரண்டு திருத்தலங்களும் நாயன்மார்களுடைய பாடல்களைப் பெற்ற பழம்பதிகளாக விளங்குகின்றன.

அண்மையிலே திருக்கோண மலைக்கருகிலுள்ள கடலில் நாற்பது அடி ஆழத்திலே கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கம் மூவாயிரம் ஆண்டு பழமையுள்ளதாகக் கருதப்படுகிறது. திருக்கோண மலையிலிருந்து கடலினால் விழுங்கப்பட்ட கோணேசுவரர் கோவிலின் அழிபாடுகள் கடலின் அடியினுள் காணப்படுகின்றன[5]. இந்தச் சிவலிங்கம் இக்கோயிலிலே இராவணனால் பூசிக்கப்பட்டதாக இருக்கலாம்.

பழந் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியங்கூறும் சேயோன் வணக்கமும், மாயோன் வழிபாடும் இன்றும் புத்தசமயத்தவர்களிடத்துக் காணப்படுகின்றன. இவர்கள் வேந்தனை இந்திரனாக்கிப் புத்த சமயத்தின் காவல் தெய்வமாகக் கொண்டுளர். தேவாந்துறையிலிருந்த வருணன் கோயிலும் பிற கோயில்களும் போத்துக்கீசியரால் அழிக்கப்பட்டன.



## கல்வெட்டுக்களில் சிவன்

புத்தசமயத்தோடு தொடர்புடைய செய்திகளை மட்டுமே சிறப்பாகக் கூறும் மகாவம்சத்திலும் இலங்கை சிவழிபாடுடைய நாடாக இருந்ததென்பதற்குப் பல சான்றுகள் உள. சிங்களவரின் முதல் அரசனெனப் போற்றப்படும் விசயன் பல சிவன்கோயில்களைக் கட்டினான் என யாழ்ப்பாணவைபவமாலை உரைக்கின்றது. இலங்கையிலுள்ள பழைய கல்வெட்டுக்களில் வரும் ''சிவன்'' ''மகாசிவன்'' எனும் பெயர்கள் இப்பெயர்களையுடைய கடவுளை மிகப் பழங்காலத்திலே சிங்கள மக்கள் வணங்கினர் என்பதைப் புலப்படுத்துகின்றன. கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்குரிய குகைக்கல் வெட்டு ஒன்றில் ''சிவ எனும் அரசனின் மகனான இளவரசன் சிவாவின் மகாசுதாசன எனுங்குகை'' எனும் உரையுளது. கி.பி.நாலாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட மகா சேனன் எனும் சிங்கள மன்னன் சிவன் கோயில்கள் பலவற்றை இடித்தழித்துப் புத்தராலயங்களைக் கட்டினான் என்று மகாவமிசம் கூறுகிறது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்து வழிபாடு செய்தபொழுது இலங்கைக் கயவாகு வேந்தன் அவனுடன் இருந்தான் என்றும், அவன் இலங்கைக்குத் திரும்பியவுடன் பத்தினித் தெய்வத்துக்குக் கோயில் கட்டி விழா எடுத்தான் என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது. இக்கண்ணகி கோயில் இன்றும் கண்டியிலுள்ள தாலதா மாளிகையிலுள்ளது.

www.tamilarangam.net



## கதிர்காமத்தின் பழமை.

முருகனின் அருள் கனியும் கதிர்காமத்தின் சிறப்பினை இன்று உலகம் அறியும். தமிழ்க் கடவுளாகிய முருகன் கதிர்காமத்தில் கோயில் கொண்டசெய்தி கந்தபுராணக் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது. சூரனைக் கொல்லுதற்கு இலங்கைக்கு எழுந்தருளிய முருகப்பெருமான் பாசறையிட்டிருந்த ஏமகூடமே கதிர்காமம் என்பர். ஏமகூடத்துடன், சமந்தகூடம், திரிகூடம் எனும் கூடங்களையும் ஒப்பிடுக. சமந்த கூடத்தை (சிவனொளிபாதமலை) மணிமேகலையும் திரிகூடத்தை (நுவரெலியையடுத்துள்ளது) இராமாயணமும், கல்வெட்டொன்றும் குறிப்பிடுகின்றன. நீதி வழுவாது இலங்கையை ஆண்ட தமிழ் மன்னனான எல்லாளனைத் துட்டகைமுன வென்றபின் கதிர்காமத்தில் பல நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினான் என்பர். 'காந்த உபாத' எனும் சிங்கள நூலிலும் இச்செய்தியுளது. கதிர்காமம் எப்பொழுது தோன்றியது என்பதை உரைத்தல் ஒண்ணாது. **சரித்திர காலத்துக்கு முன்னரே கதிர்காமம் நிலைத்து விளங்கிற்று எனல் பொருத்தமானது.**

## மூவாயிரம் ஆண்டுத் தொடர்பு

ஆதிச்ச நல்லூரில் எடுக்கப்பட்ட புதை பொருட்களில் முருகனுடைய வேலும், கொடியாகிய கோழியும், வாய் மூடிகளும் காணப்படுகின்றன. முருகனுக்குக் காவடியெடுப்போர் இன்றும் தம் வாயைமூடிக் கட்டுகின்றனர். கதிர்காமத்தில் பூசை செய்யும் 'கப்புராளைமார்' மஞ்சள் துணியினால் தம் வாயை மூடிக் கட்டுவது இன்றுமுள்ள வழக்கம். ஆதிச்ச நல்லூரில்



எடுக்கப்பட்ட புதை பொருள்கள் கி.மு.பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தியன என்பர். எனவே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முருகன் வழிபாடும் தமிழகத்திலிருந்ததென்பதும் அக்காலத்திலே முருகனை வழிபட்ட இடங்களிலே கதிர்காமமும் ஒன்றென்பதும் புலனாகின்றன. கதிர்காமத்தின் பழமையும் தமிழருக்கு இலங்கையோடிருந்த பழமையை நன்கு காட்டுகின்றது. அக்காலந் தொட்டு இன்றுவரை கதிர்காமம் முருகனின் முதன்மையை உணர்த்தும்திருத்தலமாக விளங்குகிறது. இலங்கை உள்ள அளவும் அஃது இவ்வாறே மிளிரும். கதிர்காமத்தைப் போலவே சைவமும் தமிழும் பண்டு தொட்டு இன்றுவரை இலங்கையில் நிலைபெற்றுப் பொலிகின்றன.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் இலங்கை மிகப் பழையதொரு நாடென்பதும், இலங்கையின் பழமையைத் தமிழக மக்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நன்கு அறிந்திருந்தார்கள் என்பதும், இலங்கை எனும் சொல் தமிழ்ச் சொல் என்பதும், அஃது ஈழம் எனும் பழந்தமிழ்ச் சொல்லோடு பொருளினும் ஒலியிலும் ஒன்றுபட்டது என்பதும், இலங்கையெனும் பெயருள்ள இடங்கள் தமிழகத்திலும் முன்னிருந்தன என்பதும், இலங்கையின் பழங்குடிகளாகிய இயக்கர், நாகர், வேடர் என்போர் திராவிட இனத்தவர்களே என்பதும் இவர்களுடன் தமிழர் மிகப் பழங்காலந்தொட்டே வாழ்ந்தனர் என்பதும் கி.மு.பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் தமிழ் மக்களும் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்தமையைப் புதைபொருள்கள் கல்வெட்டுகள் , முதலியன புலப்படுத்துகின்றன என்பதும், இந்த உண்மையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைச் சரித்திர ஆராய்ச்சியாளர் பலர் எடுத்துரைத்தனர் என்பதும், விசயன் காலமாகிய கி.மு.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரும் பின்னரும் தமிழகத்திலிருந்து தமிழர்கள் இடையிடையே இலங்கைக்குப் படையெடுத்து வந்து இலங்கையைத் தம்மாட்சிக்குட்படுத்தினர் என்பதும், விசயன் இலங்கையை அடைதற்கு முன்னரும் பின்னரும் மாதோட்டம் தமிழனின் புகழ்மிக்க துறைமுகமாகவும் உலகறிந்த வாணிக மையமாகவும் விளங்கியதென்பதும், விசயனுடைய பட்டத்தரசியாகிய பாண்டியன் மகளும் அவளுடன் வந்த ஆயத்தினரும் தமிழ் மொழியினையே தம் மொழியாகக் கொண்டு தமிழரின் தெய்வங்களை வணங்கிய நாடாக விளங்கியதென்பதும், தமிழ்க் கடவுளாகிய முருகனுக்கு எடுக்கப்பட்ட கதிர்காமம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியதென்பதும் பிறவும் விளக்கப்பட்டன.

* * *

1. மகாவமிசம் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பாலிமொழியில் எழுதப்பட்டநூல்
2. University of Ceylon - History of Ceylon Volume I P.95
3. 'மகாதீர்த்த' என்பது 'மகா தித்த'' எனமருவிற்று. பொன்னம்பலம் இராமநாதன் - RAS Volx, No 35, P117
4. பூநகரி - தொல்பொருளியல் ஆய்வு பக். 28 - ப.புஷபரட்ணம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
5. இந்தச்சிவலிங்கத்தைக் கடலிலிருந்து எடுத்த மைக்வில்சனும் உறொட்னிசொங்கிளாசுவும் கடலிலே இன்னும் பல புதைபொருள்கள் உள என்றும் கூறியுளர்.

# இது நியாயமா?

''நூறு வருடங்களுக்குமுன் இலங்கையிலே குடியேறிய நீங்கள் தனி ஆட்சி - தனிநாடு கேட்கலாமா? இது நியாயமா?'' என்று, இன்றும் தமிழகத்திலே பலர் கேட்கிறார்கள். இலங்கையிலே வாழும் தமிழர்களின் பழமையையும், அவர்கள் நாடாண்ட வரலாற்றையும், வட இலங்கையை யாழ்ப்பாணத் தமிழரசர்கள் ஆண்டமையையும் அறியாமையே, இத்தகைய கேள்விகளைக் கேட்பதற்குக் காரணமாகும்.

## தோட்டத் தொழிலாளர்

இந்தியாவையும் இலங்கையையும் பிரித்தானியர் ஆண்டபொழுது, இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன், வெள்ளையர்கள் இலங்கையின் மலைப்பகுதிகளில் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இவர்களுடைய காப்பி, தேயிலை, இரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தொழிலார்கள் தேவைப்பட்டனர். இத் தேவையை நிறைவேற்றுதற்குத் தென்னிந்தியாவிலிருந்து பலரைத் தொழிலாளர்களாக இலங்கைக்குக் கொண்டு சென்றனர். இவர்களுக்கு எல்லா வாய்ப்புக்களும் குடியுரிமை, வாக்குரிமை முதலியவையும் கொடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இதனால், இலட்சக்கணக்கான தமிழர்கள் கூட்டம் கூட்டமாகக் 'கங்காணிகள்' என்போரின் தலைமையில்

www.tamilarangam.net



இலங்கைக்குச் சென்றனர். இவர்கள் போதிய வீட்டுவசதி, சுகாதார வசதி, கல்விவசதி இன்றிப் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இவர்களுக்கு அவர்கள் குறைந்த கூலி கொடுத்து அடிமைகளைப் போல நடத்தினர். இவர்களுடைய வியர்வையாலும், இரத்தத்தாலுமே இன்று இலங்கையின் மலைப்பகுதிகள் சிறந்த தேயிலை இரப்பர்த் தோட்டங்களாகக் காட்சி அளிக்கின்றன.

## இந்தியத் தமிழர்

இலங்கை அரசு இந்தத் தோட்டத் தொழிலாளரை 'இந்தியத் தமிழர்' எனப் பிரித்துக் கணித்தது. இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களை இலங்கைத் தமிழர் என வேறுபடுத்தியது. இதனால் இலங்கையிலுள்ள தமிழர்கள் இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழர் எனப் பிரிக்கப்பட்டனர்.

இந்தியத் தமிழரிடையே தொழிற் சங்கங்கள் தோன்றி அவர்களுடைய உரிமைகளுக்கும் நலன்களுக்கும போராடத் தொடங்கின. 1947ஆம் ஆண்டு வரை இவர்கள் வாக்குரிமை உடையவர்களாயிருந்தனர். 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் இவர்கள் எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

**இலங்கையின் சிங்கள அரசு 1948 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய குடியுரிமைச் சட்டமும், 1949 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய வாக்குரிமைச் சட்டமும் இவர்களிலே** பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டோரின் **குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்தன.** இந்திய



அரசின் 1950ஆம் ஆண்டு அரசியற் சாசனத்தால் இவர்கள் இந்தியர்கள் என்று இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும் உரிமையையும் இழந்து, நாடற்றவர்களாக்கப் பட்டனர்.

## அல்லற்படும் இந்தியத் தமிழர்

இந்த நாடற்ற இந்தியத் தமிழரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1964 இல் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாத்திரியும், இலங்கைப் பிரதமர் திருமதி பண்டார நாயக்காகவும் ஓர் உடன்படிக்கை செய்தனர். இந்த ''சிறிமா சாத்திரி'' உடன்படிக்கையின்படி நாடற்றவர்களில் ஐந்து பேரை இந்தியா ஏற்றுக்கொண்டால், இலங்கை மூன்று பேருக்குக் குடியுரிமை வழங்குதல் வேண்டும். 5,25,000 பேருக்கு இந்தியா இந்தியக் குடியுரிமை கொடுத்து, அவர்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்ளவும், 3,00,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தப் பணியினை 15 ஆண்டுகளில் செய்து முடிப்பதற்கும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. ஆனால், இன்றுவரை நாடற்ற தமிழர் பலர் உரிமைகளின்றி இலங்கையில் அல்லற்படுகின்றனர்.

இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களில் தொழில் செய்ய வந்து, இலங்கையில் வாழும் இந்த இந்தியத் தமிழர்களையே, இலங்கைத் தமிழரென இந்தியர்கள் பலர் கருதிக்கொண்டு, இவர்கள் எவ்வாறு தனி அரசு - தனி நாடு கேட்கலாம்?' என்று கூறுகின்றனர். இவர்களிற் பலர் இன்றும் தங்கள் குடியுரிமை வாக்குரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

www.tamilarangam.net



## இலங்கைத் தமிழர்

தனி அரசுக்கு - தன்னாட்சிக்குப் போராடுபவர்கள் இலங்கைத் தமிழர்களாவர். இவர்களின் முன்னோரே இலங்கையின் தொல்குடிகளாவர். சிங்களவர் இலங்கையில் கால் கொள்வதற்கு முன்னரே இலங்கையில் வாழ்ந்தவர்கள் இவர்கள். இயக்கர், நாகர் என்பவர்களும், தொல்குடித் தமிழர்களேயாவர். சங்ககாலப் புலவர்களில் ஒருவரின் பெயர் ''ஈழத்துப் பூதன் தேவனார்'' என்பது. இவர் சங்க காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவராவார். பட்டினப் பாலை எனும் சங்கநூல் ''ஈழத்து உணவு'' என்று குறிப்பிடுவதையும் நோக்குக.

## சிங்கள - தமிழ் இனங்கள் மோதல்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சேனன், கூட்டிகன் எனும் தமிழ் வணிகர் இருவர் இலங்கையை இருபது ஆண்டுகள் ஆண்டனர். இவர்களின்பின் எல்லாளன் எனும் சோழ நாட்டுப் பெருமகன் இலங்கையை நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆண்டான். 'நீதி வழுவாத அரசன்' என இவனை மகாவமிசம் எனும் நூலும் குறிப்பிடுகிறது. இவனை வென்ற துட்டகைமுனு எனும் சிங்கள அரசனைச் சிங்கள மக்கள் தங்கள் இனத்தைக் காப்பாற்றியவனாகவும், சிங்கள ஆட்சியை நிலை நாட்டியவனாகவும் இன்றுவரை ஏற்றிப் போற்றுகின்றனர்.

**துட்டகைமுனு - எல்லாளன் போரே சிங்கள - தமிழ் இனங்களின் முதல் மோதலாகும்.** அன்றிலிருந்து இன்றுவரை இந்த மோதல் பல்வேறு முனைகளில் நடந்து



வருகிறது. மகாவமிசம் எனும் பாலிமொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூலின்படி துட்டகைமுனு இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதற்கு முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்களை வென்றான். எல்லாளனுடன் முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்டார்கள். எனின், அக்காலத்திலேயே இலங்கை முழுவதிலும் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது நன்கு புலனாகிறது. **அக்காலந்தொடக்கம் யாழ்ப்பாணத்தமிழரசர் காலம் வரையும் இலங்கையைப் பல தமிழ் மன்னர்கள் ஆண்டுள்ளர்.**

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் முதலாம் இராசராசன் இலங்கையை வென்று பொலநறுவையைத் தலை நகராக்கி ஆண்டான். மும்முடிச் சோழ மண்டலம் எனும் பெயருடன் இலங்கை முழுவதும் பதினோராம் நூற்றாண்டிலும் சோழர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

## யாழ்ப்பாணத்தமிழரசர்கள்

யாழ்ப்பாணத் தமிழரசர்கள் வட இலங்கையை கி.பி.1214ஆம் ஆண்டு தொடக்கம், ஐரோப்பியர்கள் இலங்கையை அடிமைப்படுத்தும் வரையும் 1621 ஆம் ஆண்டு வரையும் - தொடர்ந்து நானூறு ஆண்டுகளுக்கு மேல் ஆண்டனர். யாழ்ப்பாணத் தமிழரசர்களில் கடைசியாக ஆண்டவன் சங்கிலியன் எனும் மன்னனாவான். 1621 இல் இவனுடன் போர்த்துக்கிசர் போரிட்டு இவனை வென்று சிறை பிடித்தனர். பின்னர் இவனைக் கோவாவுக்குக் கொண்டு சென்று தூக்கிலிட்டனர். இதனால் யாழ்ப்பாண அரசு - தமிழ் ஈழ அரசு முடிவெய்தியது.

www.tamilarangam.net



ஐரோப்பியர் தொடர்ந்து இலங்கையை அடிமைப் படுத்தாதிருந்தால், இப்பொழுதும் யாழ்ப்பாண அரசு நிலைத்திருக்கும்; தனித் தோங்கி ஈழத்தமிழ் அரசாக விளங்கியிருக்கும் என்பதை இந்திய மக்களும், பிறநாட்டு மக்களும் அறிதல்வேண்டும்.

போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இலங்கையை ஆண்ட போதும் வட இலங்கையைத் தனிப்பகுதியாகவே ஆண்டனர். இப்பகுதியை "யாழ்ப்பாணப்பட்டணம்" என்று வழங்கினர். ஆங்கிலேயேரும் இலங்கையைக் கைப்பற்றியவுடன், முப்பத்தோராண்டுகள் தமிழ்ப் பகுதியைப் பிரித்தே ஆண்டனர்; பின்னர் 1883 இல் இலங்கை முழுவதையும் ஒன்றாக்கி ஓர் ஆட்சிக்குட்படுத்தினர்.

## இழந்த அரசைப் பெறப்போராட்டம்

ஆங்கிலேயருக்குப் பின், இலங்கையை ஆளும் சிங்களவர், இலங்கைத் தமிழரின் பிறப்புரிமைகள், நில உரிமைகள், கல்வி உரிமைகள் முதலியவற்றைப் பறித்து, அவர்களின் வேண்டுகோள்களையும், கிளர்ச்சிகளையும், சத்தியாக்கிரகப் போராட்டங்களையும் பொருட்படுத்தாமல், அவர்களுடன் செய்த ஒப்பந்தங்களையும் கிழித்து எறிந்துஅவர்களைஅடக்கி ஆள்வதாலேயே தமிழ் மக்கள் தனி ஆட்சி கேட்டுப் போரிடும் நிலைமை உருவாகியுள்ளது. எனவே, தமிழர்கள் தாங்கள் பறி கொடுத்த தமிழரசை - தனி அரசை மீளப்பெறுவதற்கு முயல்வது நியாயமானதே என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

★ ★ ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்